ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

உற்றோமே யாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநம் காமங்கள் மாற்று — ஆண்டாள்

தொகுதி ௩௧	கர ௵ ஆவணி ௴	பகுதி ௮

பிரார்த்தனை

ஸ்ரீராமகிருஷ்ண நாமாமிருதம்

28. காலமதின் காமினியார் என்றழைத்தார் கேனராம்
(கால...யார்—கால வடிவான ஈசனின் மனைவியார்.)
29. சாலுமதி மந்திரத்தும் தந்திரத்தும் பெற்றவராம்
காளிதானர் கனிந்தளித்தார் கைவல்ய தாயினிப்பேர்.
30. ஆளும் அந்தர் யாமிப்பேர் அளித்தனளால் ராஸமணி.
31. பசுபதியும் சக்தியுமாம் பரவடிவம் நேர்கண்டு
விசுவபிதா மாதாப்பேர் விளம்பினர் மதுர்பாபு.
32. மாயேசன் எனுநாமம் வழங்கிமகிழ்ந் தார் ஹாஸ்ரர்
விருப்பொடியல் காட்டிமறை விளையாடல் தனைக்கண்டு.
33. தருப்பஹரி யெனுநாமம் தந்தனர்வைஷ் ணவசரணர்.
(விருப்பொடு இயல்...தர்ப்பஹரி—அகந்தையை ஒழிப்பவர்);
34. இருதயர்தம் அனுபவத்தால் ஈந்தபெயர் விபத்பஞ்சன்
(விபத்பஞ்சன்—ஆபத்தைப் போக்குபவர்.)
35. தருபவ நிஸ் தாரிணி யார் சாரதையார் தந்தபெயர்
(பவ நிஸ்தாரிணி—பிறப்புக் கடலைக் கடத்தும் அம்மையார்.)
36. கேசவர்தம் முடிபாகக் கிளந்தபெயர் பிரம்மசக்தி
37. கோசுவாமி விஜய் தரும்பேர் சோடச கலாபூர்ணர்
38. பெயரளித்தார் துலாலி யெனப் பிருந்தைவன கங்காமாய்
(துலாலி—செல்வக்குமரி.)
உயர் ராதை பாவனையில் உன்மத்தங் கொளக்கண்டு.
39. கோலோக விஹாரி யென்றார் குளிர்பதும லோசனரே
(கோலோக விஹாரி—கிருஷ்ணன் வாழும் கோலோகத்து இன்புறுபவர்.)
40. பூலோகம் ஒழி கரைசேர் புணை யென்றார் சம்புமல்லிக்
(பூலோ...புணை—பிறப்புக்குரிய இவ்வுலகத்தை ஒழிக்கும் கரையைச் சேர்க்கும் தோணி.)

(தொடரும்)

உயர்ந்தோர் கூறும் உறுதி மொழிகள்

இல்லற வாழ்க்கையில் உள்ள போதே இறைவனைப் பற்றிச் சிந்தித்துப் பிரார்த்திப்பவன் உண்மையில் ஒரு வீரனே. இறைவன் இவ்வாறு நினைக்கிறான்: எனக்காக உலகத்தை வெறுத்தவர் என்னிடம் பிரார்த்திப்பது திண்ணம். அவர் எனக்குப் பணி செய்வது கட்டாயம். அதிலே விசேஷம் யாதொன்றுமில்லை. அவர் அதைச் செய்யத் தவறுவாராயின் மக்கள் அவரைத் திட்டுவர், வெட்கப்படும்படி செய்வர். ஆகையால், தனது உலகக் கடமைகட்கும் நடுவே என்னிடம் பிரார்த்திப்பவன் உண்மையிலே பாக்கியசாலிதான். அவன் ஒரு பெரும் இடையூற்றினை எதிர்த்துத் தள்ளிவிட்டு என்னைக் காண முயற்சிக்கிறான்—ஒரு டன் நிறையுள்ள பெருங் கல்லொன்றை எற்றித் தள்ளுபவன்போல் ஆகிறான். அத்தகைய மனிதன் ஓர் உண்மை வீரன்.

உலகிலே ஓர் எறும்பைப் போன்று வாழ்க; பொய்யும் மெய்யும் கலந்த கலப்பே, சருக்கரையும் மணலும் கலந்த கலப்பே இவ்வுலகம். எறும்பாயிரு, சருக்கரையை எடுத்துக் கொள்.

இன்னும், பாலும் நீரும் கலந்த கலப்பே இவ்வுலகம்; ஈசனது தரிசனத்தால் வரும் பேரின்பமும், இந்திரிய போகத்தால் வரும் சிற்றின்பமும் கலந்தது இவ்வுலகம். அன்னமாயிருந்து, நீரைவிட்டுப் பாலைக் குடி.

நீர்க் கோழியைப் போல் உலகத்தில் வாழ்க; நீர் பறவையின் மீது ஒட்டிக் கொள்கிறது, ஆனால் பறவை அதை உதறித் தள்ளுகிறது. மண்ணுக்குள் வாழும் ஒருவகை மீனைப்போல வாழ்க. அம் மீன் மண்ணுக்குள் வாழ்கிறது; ஆனால் அதன் தோல் எப்போதும் பிரகாசமாயும் பளபளப்பாயும் உள்ளது.

உண்மையும் போலியும் கலந்ததே இவ்வுலகம். போலியைத் தள்ளிவிட்டு, உண்மையை எடுத்துக் கொள்.

— ஸ்ரீராமகிருஷ்ணர்

கருமம் புரிக; அப்போது உனக்குத் தாங்க முடியாத அளவிற்கு உன்னிடம் ஏராளமான சக்தி பெருகுவதைக் காண்பாய். பிறருக்காகச் செய்யும் அற்பமான கருமமும் உள்ளேயிருக்கும் சக்தியை எழுப்பிவிடும்; பிறர்க்குச் செய்யும் சிறிதளவு நன்மையும் வரவர ஒரு சிம்மத்தின் பலத்தை நெஞ்சிற்குள்ளே புகுத்தும். உங்கள் அனைவர் மீதும் எவ்வளவோ பிரியமுடையேன்; ஆனால் பிறருக்காக உழைத்துக் கொண்டே நீங்கள் உயிரைவிட வேண்டும் என்பதை யான் விரும்புகிறேன்—நீங்கள் அவ்வாறு செய்வதைக் காண மகிழ்ச்சியடைவேன்!

— சுவாமி விவேகானந்தர்

தனது நெஞ்சமாகிய குளத்து நீரின் கொந்தளிப்பை மெல்ல மெல்ல அமர்த்தி, அதனாலே ஞான ஒளியை எவன் பெறக்கூடும்? மனதை ஒருமுகமாக்குவதனால் மன அமைதியைப் பெற்றபின், அவ்வமைதியினின்றும் மெல்ல மெல்ல வாழ்க்கைச் சுழலிற் புகுந்தும், எப்போதும் மன அமைதியை விடாது காப்பாற்றக் கூடியவர் யார்? தற்பெருமையினின்றும் தம்மைக் காத்துக் கொள்பவரும், முத்திநெறியினின்றும் விலகாத வண்ணம் தம் வாழ்க்கையை அடக்கியாள்பவரும் மட்டும் தான். தற்பெருமையினின்றும் நீங்கியிருத்தலின், அன்னாரது ஊக்கமும் சக்தியும் ஒருக்காலும் குன்றி மறையாது, அப்போதைக்கப்போது புதிது புதிதாகப் பெருகிவரும்.

—லேயாட்சு (சீன நாட்டு மாபுருடர்)

தூய ஆனந்தம் நெஞ்சில் விளிம்புவரை நிறையப் பெறவேண்டுமாயின், அந்நெஞ்சு அமைதியாயிருத்தல் வேண்டும்.

—ஒரு பெரியார்

என் உயிரினிடத்து ஒரு திறமை உள்ளது; அதன் பயனாக அது இறைவனுக்கு முற்றிலும் திறந்த நிலையில் உள்ளது. நான் வாழ்வது எவ்வளவு உறுதியோ அவ்வளவு உறுதி அதைப்பற்றி எனக்கு உண்டு. வேறொன்றும் இறைவனைப் போல எனக்கு அவ்வளவு அருகாமையில் இல்லை. என்னைக் காட்டிலும் இறைவன் எனக்கு மிக அருகே உள்ளான். அவரது ஸந்நிதியே எனது இருப்பு.

—மாஸ்டர் எக்ஹார்ட்

தியானம் இன்றி மனம் அமைதியை அடைய ஒண்ணாது; அமைதியின்றி ஞானம் அடைதல் முடியாது. "மனம் அமைதியடைந்தபின் நான் தியானிப்பேன்" என்பது நடக்க முடியாத காரியம். அமைதியும் தியானமும் ஒருங்கே நிகழவேண்டும்.

—சுவாமி பிரம்மானந்தர்

வாழ்க்கையிற் பெருந்துயரங்கள் வரும் போது தீரம் வேண்டும். அற்ப துயரங்கள் வரும்போது பொறுமை வேண்டும்: இவை உண்டாயின், உனது அன்றாடத் தொழிலை முடித்ததும், சாந்தியோடு உறங்கச் செல்க— அப்போது பகவான் விழித்திருக்கிறார்.

—விக்டர் ஹியூகோ

குருதேவர் உபதேச மணிமாலை

(173-ம் பக்கத் தொடர்ச்சி)

918—சமாதியால் அகங்காரம் அழியும்

உண்மையா ஞான முறின் அகங்காரம்
ஒழிந்திடும், சமாதியில் லாமல்
வண்மையார் ஞான மருவிடா திங்கு
மதிகதி ருச்சியில் வருங்கால்
அண்மையா நமது நிழனிலந் தோன்று
தணிசமா தியில்அகந் தோன்று,
எண்மையாற் சிறிது தோன்றினும் வித்தை
யியைந்ததா மவித்தைய தன்றே. 179

(மதி கதிர்-சந்திரனும் சூரியனும்)

920—ஞானமும் அஞ்ஞானமும்

ஞானமஞ் ஞான மிரண்டையுங் கடக்க;
நாடினேன் றென்பது ஞானம்;
ஊனமஞ் ஞானம் பலவெனல்; கடவு
ளொருவனிங் கெதற்குமா தார
மானவ னென்னல் ஞானம், அஞ்ஞானம்
அவ்வறி வின்மையாம்; கல்வி
மானமஞ் ஞானம்; பொருளெலா மொரு வன்
மருங் கிணைந் தனவெனல் ஞானம். 180

(ஊனம்-குற்றமான. மானம்-செருக்கு, அகங்காரம்; ஒருவன்-ஒப்பற்ற இறைவன்.)

920—ஞான அஞ்ஞானங்களைத் தாண்டு

தைத்ததோர் முள்ளை வேறொரு முள்ளால்
தள்ளிவிட்டிரண்டையு மெறிவாய்;
வைத்தவஞ் ஞான முள்ளினை யெடுக்க
வாய்த்திடு ஞானமா முள்ளை
உய்த்திடுகின்றாய்; பின்பிரம்மத்தை
உற்றிட விரண்டையுங் கடப்பாய்;
எய்த்தலின் ஞான மியைந்தவஞ் ஞானம்
இரண்டையுங் கடந்தது பிரம்மம். 181

(உய்த்திடு-எறிந்து விடு.)

920—பிரம்மத்தை விளக்க இயலாது

மெய்ப்பிர மத்தை விளக்கிட வியலா,
விழைதரு கன்னிதன் சகியை
'எப்படிப்பட்ட வின்பநீ பெறுவா
யியைந்திடுங் கணவனே' டென்றாள்,
'தப்பற நீயே தானுணர்ந் திடுவாய்
தலைவனை யடைந்திடும் போதில்
ஒப்புற வதனை யுரைப்பதெவ் வா'றென்
றுளநகைத் தியம்பினள் தோழி. 182

(உளம் நகைத்து-உள்ளே சிரித்து)

921—உலக ஞானம் ஒழிந்தால் சமாதி

குருவியின் கூடு குலைந்தழிந் திட்டால்
குருவிதான் பறந்திடும் வானில்,
மருவிடு மதுபோன் மாயமா முலக
மற்றுமித் தேகஞா னந்தான்
வெருவற நீங்கின் வினையறு சீவன்
விளங்கிடும் பரமெனும் வானில்
உருவறப் பறந்து சென்றுமெய்ச் சமாதி
யுயர்நிலை தனிலொன் றிடுமே. 183

படைப்பில் வேற்றுமையும் ஒற்றுமையும்

(சுவாமி அத்புதாநந்தர்)

சடோபாத்யாயர்: மனிதனுக்கும் மனிதனுக்கும் வேறுபாடு சாரத்தில் இல்லையாயின், வெளியிலே வேற்றுமை இருப்பதேன்?

லாட்டு மஹராஜ்: இப்புதிரைப் புத்தியினால் ஒய்க்க இயலாது. மக்கள் இந்த நிலைக்கு வந்ததும் அவர்களுடைய புத்தி நின்று விடுகிறது. சுத்த மனதில் சுத்த புத்தி உதயமாகும் போது, அம்மாதிரியான கஷ்டமான விஷயங்களெல்லாவற்றையும் அறிய இயலும். ஈதனைத்தும் சாதனத்தின் வட்டாரத்தைச் சேர்ந்தது. சாதனத்தாலும் பகவானது கிருபையாலும் ஒருவனுக்கு ஞானோதயம் உண்டாகும் போது, அம்மாதிரியான

அனுபவங்களையெல்லாம் பெறலாகும். அதற்கு முன்பன்று. விவரமாகக் கூறி உமக்கு விளங்கும்படிச் செய்வது முடியாத காரியம். ஈசனின் அறியவொண்ணாத் திவ்விய சக்தியை நான் எப்படி வருணிப்பது? அந்த சக்தியை அறிவது உமது கேள்விக்கு விடையை அறிவதாகும்.

அவரைப் பற்றிப் பேசுதல், இரண்டு உண்டென்று முதலிலே பாவித்துக் கொள்வதாகும். ஆனால் அவர் இரண்டற்ற ஒரு தத்துவமே. அவரைப் பற்றி நாம் பேசுவதானால், அவர்க்கு ஆதியில்லை, அவர் நித்யர் என்று சொல்லித் தொடங்கவேண்டும். அம் மாதிரியே ஈசனைப் பற்றிய பேச்சை முடிக்க நீர் விரும்பினால்—ஒவ்வொரு பேச்சையும் முடிப்பது போல—அவர்க்கு அந்தமில்லை, அவர் எல்லையற்றவர் என்றே நீர் முடிக்க வேண்டியதாகும். படைப்புக்கு ஓதப் புரோதமாயிருப்பவரை (நெசவிலே குறுக்கிழையும் நெட்டிழையும் போல் இருப்பவரை)ப்பற்றி அவரால் (ஈசனால்) தான் பேசமுடியும்; அவர் நம்மை அறியும்படிச் செய்யும் போதுதான் அவரை நாம் அறிய முடியும்.

சடோபாத்யாயர்: அவரே நாம் காணும் பொருள்களாகத் தோன்றியுள்ளார் என்று ஒப்புக் கொள்வோமாயின், அவரே காரணமும் காரியமும் என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டியவராவோம். காரணமும் காரியமும் எவ்வாறு ஒன்றாயிருக்க முடியும் என்பதை அறிய எனக்கு விருப்பம். ஒரு சிறிதும் வேறுபாடு இல்லையா?

லாட்டு மஹராஜ்: சரி, இதைக் கவனியும். படைப்புத் தொழில் காரண காரியம் இரண்டையும் இணைக்கிறது. விகாரம் (படைப்பாகிய தோற்றம்) காரண காரியங்கள் இரண்டிற்கும் உரியது என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறுவதுண்டு. ஆனால் படைப்பின் ஆரம்பத்தில் இருந்தது யாது? காரணம் காரியம் இரண்டும் வேறுபடுத்தப் படாத நிலையில் ஒன்றாக இருந்தன. அந்நிலையில் அவற்றில் யாதொருவேறுபாடும் இருந்ததில்லை.

சடோபாத்யாயர்: அவ்வாறாயின், காரண காரியங்கட்குள்ள இவ்வேறுபாடு எவ்வாறு தொடங்கிற்று?

லாட்டு மஹராஜ்: அது எவ்வாறு உண்டாயிற்று என்பதை உரைக்க இயலாது. ஆனால் வேறுபாடு உள்ளது என்பதும் உண்மைதான். 'ஏன்?' என்ற கேள்விக்கும் விடை கிடையாது. ஆனால் இவ்வளவு மட்டும் சொல்லக்கூடும்—எதையும் ஆக்கவும் அழிக்கவும் வல்ல, அறிய முடியாத தெய்விக சக்தி இது என்பதே. அதுவே வேறுபாட்டை உண்டு பண்ணியது. இச் சக்தியும் ஈசனது சங்கற்பமும் ஒன்றேயாம். அவரது சங்கற்பத்தால் உலகத்திற்குக் காரணம் தோன்றிற்று. அவர் மாயைக்கு ஈசன். காரியமாகிய உலகம் மாயையின் எல்லைக்குள் இருக்கின்றது. சாஸ்திரங்கள் இவ்விரண்டையும் பிரகிருதியாகவும் புருஷனாகவும் வருணிக்கின்றன. இவ்விரண்டிற்கும் உள்ள வேறுபாட்டின் இயல்பை நீர் அறிவீரோ? அசையாது நிற்பதும் அசைந்து செல்வதும் போலே. அசையாது நிற்கும் நிலை புருஷன்; அசைந்து செல்லும் நிலை பிரகிருதி. இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று வேறானவையல்ல பிரகிருதியைச் சார்ந்த பொருள்கள் சக்தியின் வேகம் பெற்றுச் சஞ்சரித்துக் கொண்டிருப்பது பற்றி அவற்றை வெவ்வேறாகக் கூறுதல் பொருந்தாது. இவ்வேறுபாடு எவ்வாறு உண்டாகிறது என்று நீர் கேட்கலாம். இதுவும் மாயையின் செயலே. அதன் சக்தியால் மட்டும் தேசமும் காலமும் தோன்றியுள்ளன. இந்நிலையில் ஜீவன் (தனிப்பட்ட ஆன்மா) பிறக்கிறது. ஜீவன் பிறப்பிறப்புகட்கு உட்பட்டு வருகிறது. கருமமாகிய விளையாட்டு தேச காலங்களில் நடந்து கொண்டேயுள்ளது. ஜீவன் கருமத்தின் எல்லைக்கு அப்பாற் செல்ல இயலாதாயின், அவன் மாயையின் பந்தங்களை அறுத்தெறிய இயலாதவனாவான். இக்காரியம் கைகூடியதும் ஜீவன் பிரம்மத்தோடு ஒன்றாகி விடுகின்றான் என்பதன்று. ஆயினும் ஏதேனும் வேறுபாடு இரண்டிற்கும் இருக்கத்தான் செய்யும். இவ்வேறுபாடு நெருப்பிற்கும் அதனின்றும் கிளம்பும் பொறிகட்கும் உள்ள தொன்றென ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறுவதுண்டு. இவ்விரண்டிற்கும் இடையேயுள்ள சக்தி வேறுபாடு பிரம்மத்திற்கும் ஜீவனுக்கும் இடையே உள்ளது. பிரம்மம் காரண காரியங்கட்கு அப்பாற்பட்டது. அஞ்ஞானம் ஞானம் இரண்டிற்கும் அப்பாற்பட்டது என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல்வதுண்டு. அது மாயையினின்றும் முற்றும் விடுபட்டதாகும். மாயைக்கு அப்பாலான இப்பிரம்மத்தை 'அஸ்தி' யென்றோ 'நாஸ்தி' யென்றோ (உள்ளதென்றோ இல்லாததென்றோ) கூற வொண்ணாது. அது ஒன்றுமன்று இரண்டுமன்று (அத்வைத மன்று, துவைதமுமன்று) ஆனால் ஒன்றுக்கும் இரண்டிற்கும் இடையே, இரண்டற்ற ஒன்றாயுள்ளது.

சட்டோபாத்யாயர்: மஹராஜ், இதைச் சிறிது தெளிவாக்கிக் கூறுங்கள். எமக்குக் கிரகிக்க இயலாததாய் உள்ளது.

லாட்டு மஹராஜ்: இன்னும் அதிகமாக அறியும் அவசியம் இல்லை. உமக்குத் தெரிந்தது போதும்; நீர் சிறிதும் சாதனம் பழக மாட்டீர். நீர் சாதுக்களைப் பேசும்படி மாத்திரம் செய்வீர்.

இவ்வார்த்தைகளைக் கூறிவிட்டு லாட்டு மஹராஜ் (சுவாமி அத்புதானந்தர், ஸ்ரீ ராமகிருஷ்ணரது சிஷ்யர்) மௌனமானார்.

நமது சிகர ஜோதி

மனத்திண்மையும், அதனை அடையும் வழிகளும்

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார், திண்ணியர் ஆகப் பெறின்" என்றார் திருவள்ளுவர். அதாவது, தாம் அடைய நினைத்த பொருள்கள் எல்லாவற்றையும், அந்நினைத்தபடியே அடைவர்; நினைத்தவர், அவற்றிற்கு வழியாகிய காரியத்தில் மனங்கலங்காத உறுதியுடையவராகப் பெற்றால். இம் மனத்திண்மையே ஒருவருக்கு இன்றியமையாது வேண்டப்படும் சக்தியாகும். இது இல்லாதபோது ஒருவரது உள்ளத்து ஊறும் நல்ல உணர்ச்சிகளும் நல்ல அவாக்களும் நல்ல கருத்துக்களும் தமக்கும் பிறர்க்கும் தக்க பயனைத்தாராது வீணாகும். பிறரது துயரத்தைக் கண்டு ஒருவன் பேரிரக்கங் கொள்ளலாம்; ஆயினும் அதை நீக்க ஒரு சிறிதும் முயலாது சும்மா இருந்துவிடின், அவ்விரக்கத்தால் யாது பயன்? பெரியாரது செயல்களைக் கேட்கும் போதும் காணும் போதும், அவர்களைப் போன்று ஒழுக்கமுடையவராகும் ஆசை தடுக்க முடியாதபடி ஒருவனது மனத்திற் கிளம்பலாம்; ஆயினும் அவ்வாசையை நிறைவேற்றும் மன வலிமை இல்லாவிடில், அது பாழாகுமன்றோ? நாம் நல்லதாக நினைப்பதையும் ஆசைப்படுவதையும் அடைதற்கு வேண்டிய ஆற்றலைப் பெறுதல் நமது கடமையுமாகும். இம் மனத்திண்மையை நாம் பெறாததற்கு ஒரு காரணம், முழு மனமும் நாம் நினைக்கும் காரியத்தில் ஈடுபடாது போதலே; மனத்தின் ஒரு பகுதி ஒரு பக்கம் நம்மைச் செலுத்த, மற்றொரு பகுதி அதனைத் தடைசெய்கிறது. மனத்தின் கீழ்ப் பகுதியில் முரண்பாடும் குழப்பமும் நேர்கின்றன. நமது ஆசை மனதை ஒரு வழித் தூண்டும்போது, நமது அறிவு அதற்கு இடங்கொடாது தடுக்கின்றது. 'கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை' என்னும் பழமொழியின்படி, ஒரு சமயம் ஒரு பொருளின் மீது ஆசையும், மறுசமயம் அதற்கு இடையூறான மற்றொரு பொருளின் மீது ஆசையும் நமக்கு எழுகின்றன. இதனால் வினையும் பயன் யாதெனில், ஓர் ஆசையேனும் முற்றும் நிறைவேற வழியின்றிப் போகிறது; மனத்திண்மை முற்றுப் பெறாது குன்றுகிறது. நமது வாழ்வில் நேரும் தோல்விகள் அனைத்திற்கும் காரணம் போதிய மனத்திண்மையின்மையே. ஆயினும் எவனிடத்தேனும் மனத்திண்மை இல்லையென்று கூறுதலும் பொருத்தமன்று. மனத்தின் சக்தி பலவாறாகச் சிதறும்போது மனத் திண்மை குறைவுபடுகின்றது. மனம் கூறுபடுதலால் முழு மனமும் ஒரே நோக்கத்தில் ஊன்றுவதில்லை; மனத்திண்மை பிளவுபடாது முழுமையானாலன்றி நம்மால் எக் காரியத்தையும் வெற்றி பெற இயற்றுதல் இயலாது. இக்காரணத்தால் மனத்திண்மையை நாடும் நெறிகளை அறிந்து பின்பற்றுதல் அனைவர்க்கும் அவசியமாகின்றது.

நமது உள்ளத்தின் கீழ்ப்பகுதியிலே நமக்குத் தெரியாது நிகழும் போராட்டத்தாலும் குழப்பத்தாலும் மனம் பிளவுபடுகிறது. இரு கூறாகிறது என்றும், இதனால் மனத்திண்மை சுருங்குகிறது என்றும் மேலே கூறினோம். மனம் இரு கூறாகும்போது ஒரே மனிதனிடத்து ஒன்றுக்கொன்று பொருத்தமும் சம்பந்தமும் இல்லாத இரு வேறு மனிதர்களின் தன்மைகள் தோன்றுவதுண்டு; அச்சமயங்களில் மனத்திண்மை மிக மிக மெலிந்து, தினசரி வாழ்க்கையில் அற்பமான காரியங்களையும் இயற்ற முடியாத ஒரு விசித்திர நிலை ஏற்படுவதும் உண்டு. உதாரணமாக, ஒருவர் தமது அறைக்குள் ஒரு பூனை வரக் கண்டதும் நடுங்குவர். இன்னொருவர் இருளிலே தம் வீட்டு முற்றத்திலே தனியே சில கெஜங்கள் நடக்கவும் பெரிதும் தயங்குவர், வேறொருவர் ஓர் ஏணி வழியாக மேல் மாடிக்குச் செல்லுவராயின் ஒருக்கால் தலை சுழன்று தாம் கீழே விழுந்துவிடுவரோ என்று அஞ்சி அங்கங்குலைவர். ஆயினும் இம்மூவரும் அந்தந்தச் செயல்களொழிந்த

மற்றவற்றில் மிக்க தீரராய் விளங்குவர். இதனால் வழக்கத்திற்கு மாறான விசித்திரமான அந்த அதைரியத் தன்மையால் அவர்கள் அச்சமயங்களில் வேறு மனிதராகின்றனரோ என்ற ஐயமும் எழக்கூடும். இம்மாதிரியான மனமெலிவு உள்ளத்தின் நோயே யாதலின், அதனைத் தீர்த்தற்காக மனமருத்துவர் அதற்குக் காரணமான போராட்டத்தை அறிந்து நீக்கி, மனத்தை ஒழுங்காகத் தொழில் புரியுமாறு திருத்தி அமைப்பர்; அதன்பின் மனத்தின் சுறு சுறுப்பான நிலைக்குத் தடையாக அமைந்திருந்த கோளாறு ஒழியவே, சாதாரண வாழ்க்கைக்குரிய முயற்சிகளைச் செய்தற்கு வேண்டிய மனத்திண்மை தானே வந்தெய்தும்.

ஆனால் சாதாரண மக்களிடத்துக் காணப்படும் மனத்திண்மையின் அளவு ஞானவாழ்க்கையில் ஈடுபட நினைக்கும் அறிவாளர்க்குச் சற்றும் போதாததாகும். சாதாரண மக்கள் தாம் கற்றுணர்ந்துள்ளவாறு நீதிநெறி வழுவாது நடக்கும் மன உறுதியற்றவராகின்றனர். தமக்கென வாழாது பிறர்க்கென்றே வாழும் மஹான்களின் பெருமையைக் கண்ணாரக் காணும்போது சாதாரண மக்களிடத்தும் நல்ல உணர்ச்சியும் ஊக்கமும் ஆசையும் தாமாகமேலெழும்; ஆனால் அன்றாட வாழ்க்கையில் அவற்றைப் பயன்படுத்தும் திறமையின்மையால் அவை மறைந்து விடுகின்றன. 'ஆறுவது சினம்' 'இயல்வது கரவேல்' என்னும் புத்திமதிகளின் மேன்மையைப்பற்றி நெடுநேரம் விரிவாகப் பேசுவோரும் ஒழுக்கத்தில் அவற்றைப் பதிக்க முயலவும் ஆற்றலின்றித் தவிப்பர். 'சொல்லுதல் யார்க்கும் எளிய, அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்' என்பது செயலின் அருமையை அறிவுறுத்துகின்றது. "அறத்தை இன்னதென அறிவேன், அதனைச் செய்யும் முயற்சியும் இல்லேன்; மறத்தையும் இன்னதென அறிவேன், ஆயினும் அதனின்றும் நீங்கும் வலிமையிலேன்" என்ற துரியோதனனது வார்த்தை தமக்கும் தகுமெனக் கடுந்தவம் புரிவோரும் ஆமோதிப்பர். சித்தாந்த வேதாந்த நூல்களை ஐயந்திரிபறக் கற்றோரும் கற்றவண்ணம் ஒழுக மாட்டாததை யறிந்து மனம் புழுங்குகின்றனர். "மனிதனுக்கு இச்சை இல்லாத போதும் அவனை வலிய இழுத்துத் தூண்டிப் பாவஞ் செய்விப்பது யாது?" என்று அருச்சுனனுக்கு எழுந்த கேள்வியே பலமுறை சாதகர்கள் பலரையும் திகைக்கச் செய்துள்ளது. விழுமிய கொள்கைகளை அறியாதார் மிகச் சிலரே; அறிந்தவர் அவற்றைப் பின்பற்ற இயலாது அழுங்குவதே வாழ்க்கையிலுள்ள கேலியும் துயரமுமாம். இவை யனைத்திற்கும் மூலம் மனத்திண்மை யின்மையே. மனவலிமை பல துறைகளிலே சிதறிக் கிடக்கின்றது; பாழான மனத்தைக் குவிக்க ஒரு தந்திரம் அறியாத பேதமையே அடிப்படையாகிறது.

மனம் ஒரு முகப் படாமைக்குக் காரணம் அடிக்கடி மனக் கண்முன் வெவ்வேறு இலக்ஷியங்களை நிறுத்திச் சிந்தனை செய்தலே. இப்பழக்கம் சிறு வயது முதலே தொடங்கி, நெடுங்காலம் வரை ஒருவனை விடாது பற்றி வருகின்றது. ஒரு பட்டுப்பூச்சி ஒரு பூவை விட்டு மற்றொரு பூவிற்கு விரைந்து செல்லுதல் போலும், யாதொரு பூவிலும் நீண்ட நேரம் நில்லாதது போலும், ஒரு குழந்தையின் மனமும் பலபொருள்களாற் கவரப்பட்டு, ஒவ்வொன்றையும் பெற விழைகின்றது; ஒரு பொம்மையையும் ஒரு கனியையும் ஒரு சட்டையையும் ஒரு படத்தையும் கண்டு, ஒவ்வொன்றிலும் மதிமயங்கி அது தடுமாறுகின்றது. ஒரு சமயம் அண்டை வீட்டுக் குழந்தையைப் போல் இருக்கவும், இன்னொரு சமயம் தனக்குத் தின்பண்டங்களைத் தரும் தாயினைப் புகழ்ந்து அவளைப்போல் ஒழுகவும், இன்னொரு சமயம் ஒரு வண்டிக்காரனிடம் ஈடுபட்டு அவனைப்போல் நடிக்கவும் ஆசைப்படும். யாதேனும் ஒரு இலஷியம் அதனுடைய மனதை நிலையாகப் பற்றுவதில்லை; அதன் ஆசைகளும் சக்திகளும் பல துறைகளிலே செலுத்தப்படுகின்றனவாதலின், அவை வலியிழந்து போகின்றன. இளமை முதிரும் பருவத்தும் பையன்களும் பெண்களும் பலவகைப்பட்ட இலக்ஷியங்களில் மனஞ் செலுத்துவதை யாம் காண்கிறோம். குயிலினும் இனிய பாட்டும் மழையெனப் பொழியும் பிரசங்கமும், நடிப்புத் திறமையும் வெவ்வேறு சமயங்களில் அவர்களுடைய மனதை அள்ளிக் கொள்கின்றன. இச்சைகள் ஒன்றோடொன்று போராடுதலால், மனத்திலே குழப்பங்கள் குடிகொள்கின்றன. இலக்ஷியங்கள் ஒருமைப்படாமையாலே அவர்கள் தாம் விரும்புவதைச் செய்து முடிக்கும் ஆற்றலில்லாது வாடுகின்றனர். மனம் உறுதியின்றி ஒரு நிலையின்றிச் சமயத்திற்கு ஏற்றவாறு மாறி வருதலின், அவர்கள் மன அமைதியின்றி உழல்கின்றனர். ஒரு வழிப்பட்ட உணர்ச்சிகளும் வலிமை மிக்க இலக்ஷியங்களும் வாழ்க்கையை அடக்கியாண்டு பண்படுத்த வேண்டுமாயின், மனத்திண்மைக்குரிய பயிற்சியைப்

பற்றல் வேண்டும்; பற்றுதொழியின், மக்கள் தம் இச்சைகட்கு அடிமையாவதன்றிப் பிறருடைய இச்சைகட்கும் ஆட்சிக்கும் உட்பட வேண்டியதாகும்.

மனத்திண்மை (சங்கற்பம்) இன்னதன்மையது என்பதைப் பற்றியும், அதற்கும் ஆசைக்கும் உள்ள வேறுபாட்டைப் பற்றியும் அறிபவர் வெகுசிலரே எனல் வேண்டும்- ஆசைக்குக் காரணமாவது மனதிற்குப் புறத்தேயுள்ள ஒன்று; அது மனதை வலிய இழுத்து வசப்படுத்திக் கொள்கிறது. சங்கற்பமோ மனதிற்கு உள்ளேயிருந்து எழுந்து, அதனோடு மாறுபட்ட அனைத்தையும் அடக்கியாண்டு, குறித்த கருமத்தை இயற்றுவதில் முனைந்து நிற்கின்றது. ஓர் இச்சை உதிக்கும்போது அது நிறைவேற வேண்டும் என்னும் உறுதி தோன்றாது; நிறைவேறாது போகலாம் என்ற ஐயமும் நிகழும். ஒருவன் ரசவாத வித்தைக்கு ஆசைப்பட்டு அதனைப் போதிப்பாரைத் தேடித் திரியலாம்; ஆயினும், எதிர்பார்ப்பது நிகழாது போகலாம என்ற எண்ணம் நீங்காது அணிமாதி சித்திகளில் ஆசை ஒருவற்கு உண்டாயினும், அவற்றை யாரேனும் பெற்றதுண்டா என்ற சந்தேகமும், பெற்றதுண்டானாலும் தனக்கு அவை கைகூடாமற் போகலாம் என்ற அச்சமும் ஒருவற்கு இயல்பாகும். ஆனால் ஒரு சங்கற்பத்திலோ, நினைத்தது நிறைவேறும், நிறைவேறியாக வேண்டும் என்ற உறுதி விடாது உறையும். இம் மனத்திண்மையைப் பெறுதற் பொருட்டு, நினைத்ததை நினைத்தபடியே நிறைவேற்றும் சக்தி தன்னிடம் உண்டு என்ற நம்பிக்கை ஒருவனது உள்ளத்திலே வேரூன்றியிருக்க வேண்டும். இந் நம்பிக்கையே மனத்திண்மைக்கு உயிராவது. இந்த அடிப்படைக் குணத்தை இந்துமத நூல்கள் 'சிரத்தை' யென்ற மொழியாற் குறிக்கும். சுவாமி விவேகானந்தர் கூறுவதாவது: "தன்னம்பிக்கையென்னும் இலக்ஷியம் நமக்கு மிக உயர்ந்த உதவிபுரியக் கூடியது. தன்னம்பிக்கையை இன்னும் விரிவாகப் போதித்தும் பழகியும் வந்திருப்பாராயின் இப்போது நம்மிடத்துக் காணப்படும் கேடுகளிலும் துயரங்களிலும் ஒரு பெரும் பகுதி மறைந்திருக்கும் என்பது எனக்கு நிச்சயம்தான். மனித வர்க்கத்தின் வரலாற்று முழுமையிலுமே, பெருமை யெய்தியுள்ள ஆண்கள் பெண்கள் அனைவருடைய வாழ்க்கைகளிலும் ஏதேனும் ஒரு நோக்கத்தின் சக்தி வேறொன்றினும் மிக்க வல்லமை உள்ளதாயிருந்த தெனக் கொள்ளின், அது தன்னம்பிக்கை யென்பதேயாகும். தாம் பெரியோராகப் போகும் உணர்ச்சியோடு பிறந்தவராதலின், அவர்கள் பெரியோராயினர். ஒருவனுக்கும் மற்றொருவனுக்கும் உள்ள வேறுபாடெல்லாம் தன்னிடம் இந்த நம்பிக்கையின் உண்மையையோ இன்மையையோ பொறுத்ததாகும். தன்னம்பிக்கை எதனையும் செய்யும்...இறைவனிடம் நம்பிக்கை இல்லாதவனே நாஸ்திகன் என்று பழைய மதங்கள் கூறின. தன்னம்பிக்கை யற்றவனே நாஸ்திகன் என்று உரைக்கும் புது மதம். ஆனால் இது சுயநயம் பற்றிய நம்பிக்கையன்று. ஏனெனில் வேதாந்தமாவது ஏகம் என்னும் கொள்கையே. இதன் பொருளாவது, நீயே யாவுமாதலின் எல்லோரிடத்தும் நம்பிக்கை வைத்தலேயாம்."

சிரத்தையென்னும் வடமொழி நம்பிக்கையை மட்டும் குறிக்கும் சொல்லன்று. சிரத்தையென்னும் குணத்திலே அடங்கியுள்ளவையாவன: முழுமனதோடு பற்றும் ஒரு நோக்கம், பணிவு, பயபக்தி, நம்பிக்கை என்பன. சிரத்தை யுள்ளபோது, முழுமனதும் ஒரு காரியத்தில் ஊன்றியிருக்கும்; அதனை இயற்றும் திறமை தன்னிடம் உள்ளது என்ற நம்பிக்கையும், அதோடு அத்திறமையை வெளிப்படுத்திச் செயலை முடிப்பதற்கு இன்றியமையாத ஊக்கமும் மனத்திற் குடி கொண்டிருக்கும். சிரத்தையுடையவனுடைய மனம் மிகச் சுறு சுறுப்பாக வேலை செய்யும்; கருமமே கண்ணாயிருக்கும்; பொறுமையும், விடாமுயற்சியும், எதிரும் இடையூற்றை எதிர்த்து நிற்கும் தைரியமும் தாமே அதில் தலையெடுக்கும். எதிர்பாராத ஒரு செயலோ ஆபத்தோ நிகழினும், மனங் கலங்காதும் அமைதியை இழவாதும், எடுத்த கருமத்தை இனிதே முடிக்கும் உறுதியோடு சிரத்தை நிகழும்; அவ்வமயம் பரபரப்படைந்து உடல் நடுங்குவார்க்கு மனத்திண்மை மறையும்; தன்னம்பிக்கை நழுவும்; சோர்வும் தோல்வியும் விளையும். பிரசங்கம் செய்ய எழுந்து ஓர் அவையின் (சபையின்) முன் நிற்பவன் தன்னம்பிக்கையை இழந்து, சபைக்கு அஞ்சுவானாயின், அவனிடம் முன்னிருந்த சொல்வன்மையும் குறுகிவிடும். அமைதியும் நம்பிக்கையும் சிரத்தைக்கு இன்றியமையாதனவாம். சாத்தையுடையோன் தனது இந்திரியங்களை நன்கடக்கி, ஞானத்தையும் பெறுவான், சாந்தியால் இன்புறுவான் என்றும், அறிவும் சிரத்தையும் இன்றி ஐயத்தையே இயல்பாகக் கொண்டோன் அழிவடைகிறான் என்றும் கீதா சாஸ்திரம் கூறும். சிரத்தையற்றவனுக்கு இம்மை

யிலோ மறுமையிலோ எதனையும் பெற இயலாது போகும். ஆதலின் மனத்திண்மையை வேண்டுவார் சிரத்தையைப் பேணி வளர்த்தல் வேண்டும்.

மனத்திண்மையைக் கெடுப்பது மனக் குரங்கின் தாவும் தன்மையே. 'நின்றவா நில்லா நெஞ்சம்' என்றார் ஒரு பெரியார். நாம் விரும்புங் காலம்வரை ஒன்றையே பற்றி நிற்கும்படி மனத்தைப் பழக்குதல் அக்குரங்கின் தன்மையைக் கெடுக்கும் வழியாகும். எடுத்த கருமம் யாதாயினும் அதை முடிக்கும்வரை வேறோரு கருமத்தில் மனம் செல்லாதபடி தடுத்து வைக்கும் பழக்கம் மனத்திண்மையை வளரச் செய்யும். பல மரங் கண்ட தச்சன் ஒரு மரமும் வெட்டான் என்பது பழமொழி. ஐந்தாறு இடங்களில் பத்து அடி ஆழம் கிணறு தோண்டித் தண்ணீர் வாராமையால் மனம் வருந்துவார் பலர்; முதலிடத்திலே அன்னார் ஐம்பது அறுபது அடி ஆழம் தோண்ட முயன்றிருப்பீராயின் அவ்வளவு ஆழம் தோண்டு முன்பே நீர் பெருகுவதைக் கண்டிருப்பார். ஒவ்வோரிடத்திலும் பத்தடி ஆழம் தோண்டி, ஐம்பது அடி ஆழம் பலவிடங்களில் தோண்டுவதனால் நமது சக்தி பலவழிகளிற் சிதறிப் பயன் படாது போகிறது. ஐம்பது அடி ஆழம் தோண்டுவதக்கு வேண்டிய சக்தியை ஓரிடத்தே செலுத்துவார், அது பயன் விளைப்பதைக் காண்பார். அது போன்று, எடுத்த கருமம் ஒவ்வொன்றையும் அரை குறையாகச் செய்து இவ்வாறே பல கருமங்களை இயற்றுவோர் ஒன்றிலும் திறமையுள்ளவராகார். சங்கீதம் கற்பதில் ஆசையுடையராய்ச் சிலர் முதலைந்துநாள் பாடகர் ஒருவரிடம் சரளி வரிசை கற்பார்; பின்னர் ஒரு நண்பரது சமையல் செய்யும் திறமையைக் கண்டு மெச்சி, அத்தொழிலில் ஆசையெழுந்தவராய், அடுத்த ஐந்துநாள் சமையல் செய்யப் பழகிவருவார்; இதற்கிடையில் சாஸ்திரம் வல்லார் ஒருவர் ஞானபாடம் கற்பித்தலைக் கேட்டு, அதில் உடனே மனம் ஈடுபட்டு, அடுத்த ஐந்துநாள் அப்பாடத்தையே கற்கச் செல்வார். இவ்வாறு பழகுவதால் மனத்தின் சக்தி பல துறைகளில் சிதறுகின்றது. ஒரு துறையிலும் நிலையான பயனை விளையாது பாழாகின்றது. மனத்திண்மை ஓங்குவதற்குப் பதிலாக மனமெலிவு நாளுக்கு நாள் மிகுந்து வருகின்றது. ஆதலின் ஒரு வேலையைச் செய்து முடிக்கு முன்னமே மற்றொன்றிற்குத் தாவும் மனத்தின் இயல்பைக் கட்டுப் படுத்தல் வேண்டும். மனத்திற்கு ஓர் அளவு இச்சைப்படி திரியும் சுதந்திரத்தை அளிப்போமாயின், அது அந்த அளவிற்கு மிஞ்சியே செல்லும்; நாம் அதனைக் கண்டித்து அடக்கியாளாதவரை, அது தன்னிச்சைப் படியே கண்ட கண்ட இடமெல்லாம் திரிந்து வரும். ஆனால் ஒரு சிறு குழந்தையை அடக்கியாள்வது போன்றே மனத்தையும் கட்டுக்கு உட்படுத்திவரின், அது இணங்கிவரும். மனத்தொடு நம்மை ஒன்றுபடுத்திக் கொண்டு அது இழுத்துச் செல்லும் வழியெல்லாம் செல்லாது 'மனம் நமக்கு அன்னியமானது; ஒரு குழந்தை போன்றது; அடக்காத போது தன் இச்சைப்படியே திரிவதில் ஆனந்தங் கொள்வது' என்பதை அறிந்து அதனை எக்கணமும் கவனித்து வற்புறுத்தி, ஒன்றையே பற்றி நிற்கச் செய்தல் மிக்க பயன்தரும் பழக்கமாகும். 'மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம்' எனும் போதனையின் ஆழ்ந்த கருத்தினைச் சிந்தித்து அறிந்து நடப்பார்க்கு, மனத்திண்மை தானே மலரும்.

எடுத்த கருமம் எதுவாயினும் அதனைத் திறம்படச் செய்யப் பழகுதல் மனதிற்குத் திண்மையை ஊட்டவல்ல ஒரு சீரிய முறையாகும். 'செய்வன திருந்தச் செய்' என்பது பிள்ளைப் பருவத்தே நாம் கற்ற பயன் பொதிந்த ஓர் உபதேசம். ஒரு செயலை மேலும் மேலும் திருத்தம் பெறுமாறு செய்ய முயலும் நோக்கமே மனத்தை ஒரு வழிப்படுத்த உதவும் பெரும் சாதனமாகும். மனத்தை நேரே கட்டுப்படுத்திச் சும்மா இருக்கச் செய்யும் திறமை அரிதாகும்; ஆதலின் அதனைச் சுற்று வழியில் புறத்தேயுள்ள ஒன்றைக் கொண்டு அடக்கியாள முயலுதல் வெளியே திரியும் அதன் இயல்பிற்கு இசைந்த எளிய வழியாகும். 'பாழான என் மனம் குவிய ஒரு தந்திரம் பண்ணுவது உனக்கு அருமையோ' என்று பிரார்த்தித்தார் தாயுமானப் பெரியார். புறத்தே ஒரு கருமத்தைச் செய்வதில் பூரணத்தன்மையை நமது இலக்ஷியமாகக் கொண்டால், அதுவும் மனத்தைக் குவியச் செய்தற்குரிய ஒரு தந்திரமாகும். ஒரு கருமம் பூரணமாகுமாறு இயற்றுதல்—அதாவது, செயல் யாதொரு குறையும் இன்றியதாய், மேன்மையும் அழகும் விரைவும் அமைந்ததாய் இருக்குமாறு செய்தல்—கருமத்தை ஓர் அற்புதமாக்கும் தன்மையது. கருமம் அம்மாதிரியான நிலையை அடைய வேண்டுமாயின், அதனிடம் முழுக் கவனத்தையும் செலுத்தி, வேறொன்றையும் சிறிதும் நினையாது, உலகை

யும் தன்னையும் முற்றும் மறந்து அதனை இயற்றல் வேண்டும். அப்பொழுதுதான் செயல் வழுவின்றி அமையும், அது குறைவின்றி நிறைவொடு விளங்கும். அப்பொழுதுதான் மனிதனது உள்ளத்தினுள்ளே அடங்கிக் கிடக்கின்ற வரம்பற்ற தெய்விக சக்தி ஒரு சிறிதேனும் புறத்தே பொசியும், அதனால் ஓர் அற்புதத் தன்மையோடு அச்செயல் பொலியும். ஆக, புறத்துள்ள ஒரு செயலைப் பூரணமாகச் செய்யும் முயற்சியால், அகத்துள்ள நமது பூரணத்தன்மையை வெளிக்கொணர, நம்மை அறியாதே நாம் ஏற்பாடு செய்கிறோம். மிகக் கடுமையான முறையிலே உள்ளத்தை உள்ளபடி உரைப்போமாயின், ஒருவன் செய்யும் வேலை இவ்வாறு பூரணமடைகின்றது என்பது வெளிப் பார்வைக்குத் தோன்றும் அரைகுறையான ஓர் உண்மை; ஆனால் பூரணமடைவது அம்மனிதனே என்பது ஆழ்ந்து நோக்குவார்க்குப் புலப்படும் முழு உண்மையாம். கனவைப் பயனுடையது என்று கூறின், கனவு கண்டவனே பயனடைந்தான் என்பது உண்மைப் பொருளாகும். செயலைத் திருந்தச் செய்யும் முயற்சி செய்வோனைத் திருத்தும் முயற்சியாக மாறுகின்றது. முன்னது சிறியது, அதன் பயனாகிய பின்னதோ மிகப் பெரியது. ஆதலின் மனத்தின் திண்மையைப் பெருக்கி அதற்கு ஒரு மாண்பினை அளிப்பது, முழு மனதோடு ஒரே கருமத்தைச் செய்யப் பழகும் திறமே; அக்கருமம் அற்பமானதாயினும் ஆகுக, மிக உயர்ந்ததாயினும் ஆகுக, அத்திண்மையும் மாண்பும் வேறுபடா.

மிக உயர்ந்த மனத்திண்மையை விழைவார் நாடொறும் மனத்தைத் தியானத்தால் பயிற்றி வரல் வேண்டும்; ஒரு பொருளையே நெடுநேரம் சிந்திக்கும் பழக்கத்தை மனத்திற்கு ஊட்டல் வேண்டும். இது ஏகாக்ரசித்தம் எனும் நிலையை அடைதற்குத் தக்க சாதனமாகும். சூரியனின் கதிர்கள் ஓரிடத்தே சிதறி விழும்போது, அங்கே மிக்க சூட்டையோ ஒளியையோ நாம் காண்பதில்லை. பரந்து விரிந்து செல்லும் அக்கதிர்களை ஒரு குவிவில்லையின் மீது விழச்செய்யின்—(வெள்ளெழுத்து என்னும் கண்ணோய்க்காக அணியும் கண்ணாடியில் உள்ள வில்லை குவிவில்லையாகும்)—அவை வில்லை வழியாகப் புகுந்து மறுபக்கம் வரும்போது, வரவரச் சுருங்கி ஒரு புள்ளியை நோக்கிக் குவிகின்றன. ஒரு தாளை மறுபக்கம் அக்கதிர்கள் வரும்வழியே பிடித்து, வில்லைக்குத் தூரச் செல்லும்படி நகர்த்தி வந்தால், ஒளி வட்டம் வர வரப் பிரகாசம் மிகுந்தும் அளவு சுருங்கியும் வரும். ஒரு புள்ளியில் அக்கதிர்கள் குவியும் போது, அப்புள்ளி பொறுக்கவொண்ணாத சூடும் காணவொண்ணாத பிரகாசமும உடையதாகும். (தாள் கருகவும் தொடங்கும்.) கதிர்கள் ஒரு புள்ளியிற் குவியும்போது சூடும் ஒளியும் பேரளவுடையன ஆதல் போல, மனம் ஒரு நினைவிலே குவியும் போது அதன் சக்தி அளவற்றதாகின்றது. ஆதலால் மனத்தை ஒரு பொருளில் நிறுத்தித் தியானிக்கப் பழகுதல் அவசியமாகும். ஒரு பொருளைப் பற்றித் தியானிக்க முயலும் போது, அது அதை விட்டு வேறு பொருள்களை நாடி எண்ணற்ற முறை ஓடும்; எனினும், மனம் சலியாது விழிப்பாயிருந்து, ஒரே பொருளைப் பற்றிச் சிந்திக்கும்படி, அதனிடத்தே மனத்தை அத்தனை முறையும் இழுத்துக்கொண்டு வந்து நிறுத்தல் வேண்டும். ஆரம்பத்தில் இது மிக்க துன்பத்தைத் தருமெனினும், நாளடைவில் மனம் மேலும் மேலும் வசப்பட்டு வரும்; ஒரே பொருளைப் பற்றி அதிக நேரம் சிந்திக்கும்; அப்போது மனம் சிதறாது குவியும், மனத்தில் உள்ளடங்கிக் கிடக்கும் சக்திகள் வெளிப்பட்டு ஒருமுகப்பட்டு ஒன்றாக மருவி முழுமையாகும்.

இவ்வாறு மனதை ஒருமுகப்படுத்த நினைவார்க்கு வாழ்க்கையில் ஓர் இலக்ஷியம் வேண்டும்; அதுவும் மிகவுயர்ந்த ஒன்றாகி, மனதின் சக்திகள் அனைத்தையும் வெளிக்கொணர வல்லதாக வேண்டும்; முழு மனத்தையும் (மனத்தில் அடங்கியுள்ள இச்சை, கிரியை, ஞானம் எனும் மூவகைச் சக்திகளையும் ஒன்றாகத் திரட்டிக் குவியச் செய்யும் போதே முழு மனமும் ஒன்றில் ஈடுபடும்) தன்னிடம் ஊன்றி நிலைக்கும்படிச் செய்யும் திறமை வாய்ந்ததாக அது அமையவேண்டும். தன்னயத்தையோ குடும்ப நலனையோ தேச நலனையோ நமது இலக்ஷியமாகக் கொள்ளின், அந்நலன் பிற நலன்களோடு முரண்படும் தன்மையதாகும்; அம்முரண்பாடு உள்ளவரை முழு மனமும் அதில் ஊன்றுதல் இயலாததாகும். தனக்கும் குடும்பத்திற்கும் தேசத்திற்கும் உலகிற்கும் அனைத்துயிர்க்கும் அனைத்துலகங்கட்கும் கலப்பற்ற நன்மையைத் தரக்கூடிய ஒரு பொது இலக்ஷியமே மிகச் சிறந்ததென்பது தேற்றம் (யார்க்கும் தெளிவாகும்). அத்தகைய இலக்ஷியம் இறைவனே யாதலின், உயர்வற உயர்ந்ததும், அனைத்துயிர்க்கும் பொதுவானதும், எவர்க்கும் இன்பத்தையன்றித் துன்பத்தை இயற்ற நினைப்பதற்கும் இடங்கொடாததுமான இல

க்ஷியம் வேறில்லை. பரம்பொருள் ஒன்றே அனைத்துமானது என்னும் கருத்தால், அனைத்தும் பரம்பொருள் வடிவம் என்ற தியானம் மிக விழுமியதாகும் (மேன்மையுற்றதாகும்). இம்மாதிரியான பரம்பொருளை அடைதலே இலக்ஷியம் எனக்கொண்டு, அதனையே தியானித்தல் எவ்வழியானும் ஒன்றாக நல்லதாகும். பரம்பொருளினிடத்தே மனத்தை நிறுத்திக் குவியச் செய்ய வல்லார்க்கு மனத்திண்மை எல்லையற்றதாகும். அன்னார் எதனையும் ஆக்கவும், புரக்கவும், அழிக்கவும் வல்லவராவார், இறவாத தன்மையும் எய்துவர். தம்மையும் பிறரையும் உலகையும் இயற்கையையும் அடக்கியாளும் திறனைப் பெறுவர்.

பரம்பொருளினிடத்தே மனத்தை இவ்வாறு நிலைநிறுத்த விரும்புவார்க்கு வேறு எவ்வித விருப்பமும் நினைவும் சங்கற்பமும் பெரிய இடையூறாகும். ஆதலின் உலக இச்சைகளை அடக்குதலினும் சிறந்ததொரு முயற்சி மனத்திண்மையைப் பெறுதற்கு வேறில்லை. பலவகையான இச்சைகளையும் காஞ்சன காம இச்சைகட்குள் (பொன்னாசை, காம ஆசை) அடக்கலாமாதலின், இவ்விரண்டையும் அடக்க இடையறாது முயலுபவனே மனத்திற்கு உயர்ந்த திண்மையை ஊட்டுபவனாவான். இவ்விரண்டுள்ளும் காம இச்சையை உயர்ந்த இலக்ஷியத்தை அடைதற்காக அடக்குதல் மனதிற்கு மிக்க வலிமையைத் தரும். உடலிலே தொழில் புரிகின்ற அதியுயர்ந்த வலிமைகள் 'ஓஜஸ்' என்னும் பெருஞ்சக்தியாக மாறுகின்றன. தசைகளின் வலிமையாகத் தொழில் புரிகின்ற ஆற்றல் ஓஜஸாக மாறுகின்றது. நெடுநேரம் ஜெபம் தியானம் முதலியவற்றில் ஈடுபடுதலால் ஓஜஸ் எனும் சக்தி பெருகுகின்றது. காமஇச்சைவழியாகச்செல்லுகின்ற வலிமை முழுமையையும், அதை அடக்குவதனால், ஓஜஸாக மாற்றலாகும். பிரம்மசரிய விரதத்தைப் பின்பற்றும் ஆடவரும் பெண்களும் மட்டும் ஓஜஸை மேலெழுப்பி மூளையில் சேமித்து வைப்பார்கள். பிரம்மசரியத்தினின்றும் நழுவும் போது மன வலிமையும் ஒழுக்க வலிமையும் குறைந்து போவதை எம்மனிதனும் உணரக்கூடும். ஆன்மீக வலிமை மிகுந்த பெரியோர்களைத் தந்த குரு பரம்பரையிலே பூரணமான பிரம்மசரியம் அவசியம் எனக் கொள்ளப்படுவதற்குக் காரணம் இதுவே. எண்ணத்திலும் வாக்கிலும் செயலிலும் பூரணமான பிரம்மசரியத்திற்காக முயலுவார்க்கு மன ஆற்றலும் அறிவின் ஆற்றலும் உணர்ச்சியின் ஆற்றலும் விசித்திரமான அளவிற்குத் தாமாக வந்தமையும். பிரம்மசரியம் ஒருவற்குத் தன்னையும் பிறரையும் அடக்கியாளவல்ல அற்புத சக்தியைத் தருகிறது.

மனத்திண்மையைப் பெறுதற்கு இன்றியமையாத வேறு சில உதவிகளும் உள. உடலும் மனமும் ஒன்றையொன்று சார்ந்திருத்தலின், உடல்வலிமையைப் பெறுவோர்க்கே மன வலிமை உரியதாகும். பிரம்மசரிய வாழ்வும், ஒழுங்கான உடற்பயிற்சியும், நரம்புமண்டலத்தைக் குலைத்தழிக்கும் தீய பழக்கங்களைக் கைவிடுதலும், நல்ல சத்துள்ள உணவும், முயற்சியிலும் ஓய்விலும் உறக்கத்திலும் மிதமாயிருக்கும் நலனும் மனத்திண்மைக்குப் பெருந்துணைகளாகும். நரம்பு மண்டலத்தை வேகத்தோடு தாக்கி அதிரும்படி செய்யும் இன்ப துன்ப உணர்ச்சிகளின் பெருக்கைத் தடுத்து, மனதை அமைதியான நிலையில் வைத்தல் வேண்டும். சுருங்கிய அளவுமுறையாகப்பிராணாயாமம் செய்தலும் உடல் வலிமையையும் மன வலிமையையும் சேமித்து வைக்க உதவும். இறுதியாக, மன வலிமையின் வளர்ச்சிக்குத் தடையாகும் சில பழக்கங்களை அறவே விட்டுவிட உழைக்க வேண்டும். அவையாவன: சோம்பல், மிதமின்மை, சௌகரிய நாட்டம், பொறுப்பின்மை, எண்ணித் துணியாமை, கவனமின்மை, முரண்பட்ட வாழ்க்கை, பயனற்ற முயற்சி, தவறான வழிகளிற் சக்தியை செலவு செய்தல், சூழ்நிலையோடு உசிதமற்ற தொடர்பு கொள்ளல் முதலியன. இவையாவும் மனத்திண்மையைக் குறைப்பதில் மிக்க சக்தி வாய்ந்தன, மனத்தின் வளர்ச்சியைப் பெரிதும் தடுப்பன. இவற்றை ஒழித்தற்கு நீண்ட காலம் வேண்டியதாகலாம் எனினும், ஏராளமான காலம் நமக்கு உள்ளது என்ற நினைவை உள்ளத்தில் பதிக்கவேண்டும். மனமுண்டாயின் அரும்பாடுபடுதலும் கூடுவதாகும், ஒருவாறு ஆனந்தத்தை விளைப்பதுமாகும். ஒழுக்கத்தின் விழுப்பமும் அறநெறியினின்றும் வழுவாத ஆண்மையும், உயர்ந்த இலக்ஷியமொன்றில் மன ஊற்றமும் மனத்திண்மையை விரைவிற் பெருக்கும் ஏதுக்களாகும். அனைத்திற்கும் மேலாக, ஞான இலக்ஷியத்தை வற்புறுத்தும் மத வாழ்வே மனத்திண்மைக்கு மிக மிக உயர்ந்த தெய்விகத் தூண்டுகோலாகும். ஞானலெக்ஷியமே நம் உள்ளத்தின் அடிவரை ஆழ்ந்து சென்று நம்மை ஊக்குவதாகும், நம்மிடம் மறைந்து கிடக்கும் தெய்விக வல்லமைகளை வெளிக்

கொணரத் தூண்டுவதாகும். ஆதலின் மனத் திண்மையை எல்லையற்ற அளவுக்கு வளர்க்க முற்படுவார் ஞான இலக்ஷியத்தையே முழு மனதோடு பின்பற்றத் தாழாத முயர்சியுடையவராதல் வேண்டும் என்பது முடிவாகின்றது.

பக்தி ரஸாயனம்

(G. கிருஷ்ணமூர்த்தி ஐயர் B.A.B.L.)

(51-ம் பக்கத் தொடர்ச்சி)

23. சுத்த ரௌத்திரம் (தனிப் பயங்கரம்) ரௌத்ர பயாநகம் (பயங்கரமும் அச்சமும் கலந்தது). சுத்த ரௌத்திரதிற்கு உதாரணம் சிசுபாலன்; காரணமின்றிக் கிருஷ்ணன் மீது பயங்கரத்தன்மை கொண்டவன். ரௌத்ர பயாநகத்திற்கு உதாரணம், அவ் விரண்டும் கொண்ட கம்சன். விபாவம் என்பது சுத்தம், களங்கமில்லாத மனோபாவம். வியாமிச்ரம் என்பது அதற்கு விரோதமான கலப்புள்ள மனோபாவம். பாலும் நீரும் சேர்வது போல, பக்தியும் அடியிற் கண்ட ரசங்களுடன் கூடியதாகும்; அவையாவன:— சிருங்காரம், கருணை, ஹாஸ்யம் (பெரு நகை) இரௌத்ரம், குற்சை (இகழ்ச்சி), சாந்தம், அற்புதம், பயம் என்ற மனோபாவங்களாம்.

24. பக்தி நான்கு வகைப்படும்; அதாவது சுத்த சாத்விகம், ராஜஸம், தாமசம், மிசிரம் (கலந்தது) என திருஷ்டம் அதிருஷ்டம் திருஷ்டாதிருஷ்டம் (முன்னிரண்டும் கலந்தது) என மூன்று வகையாகவும் பிரிக்கப் பட்டுள்ளது.

ஜீவன் முத்தனிடம் திருஷ்டம் எனும் பாகம் இருப்பதில்லை. நீரரடி உண்டவன் அதன்பின் கங்கையில் உற்சாகமாக நீந்தி விளையாடுவது எப்படியோ, அம்மாதிரியே அவன் புண்ணியமும் பாவமுமின்றி எல்லா விஷயங்களிலும் கிருதகிருத்தியன் (செய்ய வேண்டியவற்றைச் செய்து முடித்தவன்) ஆனபின் பிரம்மாநந்தக் கடலில் மூழ்கி அனுபவிக்கிறான்.

திருஷ்ட பக்திக்கு உதாரணமாவோர் சனகாதி முனிவர் அதிருஷ்ட பக்திக்கு—சுத்த சாத்துவிக பக்திக்கு—மது சூதன சுவாமிகளையே (இந்நூலின் ஆசிரியரையே) உதாரணமாகக் கொள்ளலாகும். மிசிர பக்தியாவது சுத்த சாத்விகமும் சிறிது இராஜஸமும் கலந்த ஒருவகை பக்தி.

25 வைகுண்டத்தில் மிருது தீவிர பக்தியும், துவாரகையில் மத்திய தீவிர பக்தியும், பிருந்தாவனத்தில் தீவிர தீவிர பக்தியும் ஆக மூன்றுவகை பக்தி ஸ்ரீமத் பாகவதத்தில் பூர்த்தியாகிறது. (மிருது மத்ய தீவிர என்பவை முறையே தாழ்ந்தது. நடுவானது, உயர்ந்தது என்பவற்றைக் குறிக்கும்.)

26. விபாவம், ரஸம், உத்போதம், ஸ்தாயி பாவம் எனும் புஷ்கல பக்தி என நான்கு வகை.

விபாவம் என்பது இறைவனை நமக்குச் சொந்தமானவனாகப் பழக்க வழக்கங்களிற் சாதாரணமாக்கிக் கொள்வது. தியானம் மேம்பட்டு வலிமையடையும் போது, ஈசுவரனுடைய காட்சி நித்தியமாயும் சாதாரணமாயும் ஆகிவிடுகிறது. நாரதர் "ஆஹூத இவமே சீக்கிரம் சித்தேயாதி ஸ்ரீ ஹரி;" (என்று சொல்லுகிறார்).

ரஸம்—'ரஸோவை ஸ:' (பரமாத்மா ஆனந்த ரஸம்.) பக்தன் ரஸரூபமான பரமாத்மாவினால் ஆவேசமடையப் பெறுகிறான்.

உத்போதம்-ஞானத்தினால் பகவானுடைய குணம் உருவம் இரண்டையும் சொரூபத்தில் தியானம் செய்து, சாந்த பாவனையுடன் ஆனந்த ரஸானுபவம் பெற்று, 'தான் பக்தன், பகவான் தன்னை அனுபவிப்பவன்' என்பதையும் மறந்து தானே ஞானியாகி (அவனாகி) விடுகிறான். பக்திக்கும் ஞானத்திற்கும் இங்கே ஐக்கியம், ஏற்படுகிறது.

ஸ்தாயீபாவம் என்பது கடைசியாக அரும்பும் நிலை; அந்நிலை மனதிற்கு ஏற்பட்டுவிடுகிறது. இதற்குப் புஷ்கல (நிறைவான) பக்தி என்றும் பெயர். இந்நிலையில் ஞான அமுதம் எனும் தேனை ஒரு தேனீயைப் போன்று, வெகுநாளாகத்தான் சேகரித்ததை எவ்வித சாதனமும் ஆயாஸமும் இன்றிப் பக்தன் சுகமாக அனுபவிக்கிறான் (குடிக்கிறான்.) ஒரு சிறிதும் சரீர உணர்ச்சியோ இந்திரிய உணர்ச்சியோ அவனிடம் தோன்றுவதில்லை. இப்போது 'ரதியினால்' (பிரிய முதிர்ச்சியினால்) ஏற்பட்ட வெளிச்சின்னங்கள்—மயிர்க்கூச்

செறிதல், ஆனந்தக்கண்ணீர் பெருக்கல் முதலியன—தென்படுவதில்லை. அவன் தானுகி நின்று பிரக்ஞான வடிவமாகி, பக்தி ரசத்தினுல் உறுதி பெற்ற ஒரு ரசாயன அமிர்தமாகப் பரிணமித்துவிட்ட (வேறுபாடடைந்து விட்ட) சித்தத்தைப் பெறுகிருன். இந்த ஞானிதான் கண்ணபிரானுல் கீதையில் 'ஞானீது ஆத்மைவமே மதம்' (ஞானியோ நானே யாகிறேன் என்பது எனது கருத்து) என்று புகழப்பட்ட ஆத்ம சொரூபமாகிறவன். 'பக்தியினுல் என்னை எவ்வளவுடையோன்', யாவன் என ஒருவன் உள்ளபடியே அறிகிருன்' (கீதை, 18—55) என்ற உபதேசமும் இதையே குறிக்கிறது.

எல்லா சாஸ்திரங்களிலும் கூறப்பட்ட முடிவாவது, மனதை ஒடுக்கிச் சாந்தி யடைவதுதான் என்று ஸ்ரீமத் பாகவதத்தில் 11-வது ஸ்கந்தத்தில் சொல்லப்பட்டுள்ளது.

இவ்வாறு படிப்படியாக ஈசுவர தியானம் செய்து, பக்தியென்ற ஒரே சாதனத்தினுல் ஞானபரியந்தம் உள்ள ஸ்தாயீபாவத்தை (பக்தி முறுகிய நிலையாகிய ஞானத்தை) அடைவதுதான் பக்திரஸாயனம் எனப்படும்.

அகநோக்கு அளிக்கும் அறமொழிகள்

E. V. சோமசுந்தரம், B.A.

அத்யாயம்—12

அறவழியாம் அரச பாதை

"தன்னலத் தியாகம் செய்து முழுத் தூய்மையுடன் இறை பணி ஆற்று" என்பது பலருக்குக் கேட்கவே மிகக் கடுமையான காரியமாகத் தோன்றுகிறது.

ஆனுல் தன்னல வாழ்வின் முடிவில் ஆண்டவன் 'அருகே அணுகாதே!—சாபத்தீடு உடைய தீயோய்! தீராத் தீயில் தீய்வாய் போ!' எனக் கடு மொழிகளைக் கூறுவதைக் கேட்பது மிக மிகக் கஷ்டமாக இருக்கும்.

வாழ்வில் விருப்போடு இறைவழி கேட்டு அறிந்து அவ்வுயர்வழி நடப்போர் வாழ்வின் இறுதியில் இறைவனிடம் முடிவில்லா நிரயத் துன்பத் தண்டனை பெருர்.

ஆண்டவன் அவரவர் வாழ்க்கையை அளவிடும்போது அறவழி வாழ்வு நடத்தினவர்களுடைய தியாகத் தூய்மைச் சிறப்பு மிளிரும்.

உலக வாழ்வில் இறைவன் பணியில், அறவழியில், தூய தன்னலத் தியாக வாழ்வு வாழ்ந்தோர் அனைவரும், ஆண்டவன் மனிதர் வாழ்வை அளவிடும் போது, தந் நம்பிக்கையுடனும், அமைதியுடனும் இறைவன் அருகே நெருங்குவர். தெய்வீக அரசைப் பெறுவார்கள்.

2. அன்பனே! அத்தூய தியாக வாழ்வு அவ்விதம் ஓர் அரசையே அளிப்பதாக இருக்கிற போது என் அந் நல் வாழ்க்கை முறையை ஏற்று நடத்த அஞ்சுகிருய்?

அந் நல் வாழ்விலேயே விடுதலை உளது. அதிலேயே மெய்வாழ்வு உளது. அதிலேயே நமது எதிரிகளிடமிருந்து உய்யும் பாதுகாப்பு உளது. அத் தூய்மைப் பாதையிலேயே தெய்வீக இன்ப ஊற்று உளது. அத்தியாக வாழ்க்கை முறையைக் கைக்கொள்வதே உள்ளத் திண்மையைத் தரும். தெய்வீக இன்பத்தைத் தரும். அதிலேதான் அறத்தின் விழுப்பம் உண்டு. அதிலேதான் தெய்வீகப் பூரணத்துவம் பெறலாம்.

ஆன்ம விடுதலைக்கும் அழிவற்ற அமைதி நிலை பெறுவதற்கும், இத்தூய வாழ்வைத் தவிர வேறு வழியே இல்லை.

ஆதலால் தூய்மையான சேவையில் ஈடுபடு. அதன் வழி வாழ்ந்த தியாகப் பெரியோரைப் பின்பற்று. அவர்களைப்போல் நீயும் அமர வாழ்வை எய்துவாய். அவ் வருளாளர் தியாக வாழ்க்கையைக் கைக்கொண்டு தூய்மையாக வாழ்ந்து துன்பமுடிவையும் பொறுத்தது, நீயும் அத் தூய தியாக வாழ்வு வாழ்ந்து துன்ப முடிவைச் சகிக்க வழிகாட்டுவதற்கே ஆகும்.

ஏனெனில் அச்சான்ருேரைப் போன்ற முடிவு பெற்ருல் நீயும் அப்பெரியோரைப் போல அமர நிலையை அடைவாய். அவர்களுடன் துயரத் தீயில் வருந்தினுல் அவர்களுக்குக் கிடைக்கும் தெய்வீகப் புகழிலும் உனக்குப் பங்கு உண்டு.

3. கூர்ந்து நோக்கு! தியாகத்தோடு இறை பணி ஆற்றுவதிலேயே அனைத்தும் உள. நாம் அப் பணியிலே முடிந்து விடுவதில்தான் நம் நலம் உளது. ஏனெனில் அமரநிலை எய்த அதைத் தவிர வேறு வழியே இல்லை. உள்ளத்திலே உண்மையான அமைதி அடைய தெய்வீகத் தியாக வழியையும், நாள்

தோறும் தன்னடக்கக் கட்டுப்பாடுகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிப்பதையும் தவிர வேறு வழியே இல்லை.

நீ எங்கு வேண்டுமானாலும் செல், எதை வேண்டினும் தேடிப்பார். ஆனால் தன்னல மற்று இறைபணி நிற்றல் எனும் வழியைத் தவிர உண்மை நலம்பெற மேலான உயர்ந்த வழியையோ, வசதியான எளிய வழியையோ காணமாட்டாய்.

உன் இச்சைப்படியும் உன் முடிவான தீர்மானப்படியும் எல்லாவற்றையும் ஏற்பாடு செய்து முடித்துவை. அப்போதும் தவிர்க்க முடியாதபடி, நீ வேண்டினும் வேண்டாவிடினும் துன்பத்தைப் பெற்றுத்தான் ஆக வேண்டும் எனக் காண்பாய்.

ஏனெனில் உடல் வருத்தமோ உள்ளக் கலக்கமோ எதை அனுபவித்தாலும் உன் மனம் துன்பப் பட்டே தீரும்.

சில சமயங்களில் தெய்வீக ஆர்வமின்றி ஏங்கும்படி விடப்படுவாய். பிறசமயங்களில் சுற்றி உள்ளோரால் துயரப் படுத்தப்படுவாய். அதைவிட மிகுதியாக உன்னைப் பற்றியே சலிப்படைந்து வருந்துவாய்.

போக்கும் வழியாலோ, தேறுதல் பெற்றோ இத்துன்பங்களையும் வருத்தத்தையும் குறைத்துக் கொள்ளவோ, அவற்றில் இருந்து விடுபடவோ முடியாது. இறைவன் திருவருளின்படி அவை இருக்கும்வரை நீ பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

ஏனெனில் நீ ஆறுதலே இன்றி வருத்தங்களைப் பொறுத்துக் கொள்ளப் பழக வேண்டும் என இறைவன் விரும்புகிறார். இடையறா இன்னல்களால் மிகுந்த அடக்கத்தையும் பணிவையும் நீ பெற வேண்டும் எனவும் இறைவனிடமே முழுத் தஞ்சம் புக வேண்டும் எனவும் இறைவன் விரும்புகிறார்.

கண்டிப்பான தன்னடக்கக் கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிப்பவனுக்குத்தான் குணக் குன்றாக நின்ற ஒழுக்க வீரர்களான தியாகிகளின் பெருமை நன்கு தெரியும்.

தியாகப் பாதையெனும் தூயநெறி எப்போதும் எங்கும் நீ நடப்பதற்காக உன்னை எதிர்பார்த்து உனக்கு எதிர்ப்பட்டுக் கொண்டிருக்கிறது.

நீ எங்கு ஓடிச்சென்றாலும் அவ்வழியிலிருந்து தப்பமுடியாது. ஏனெனில் நீ எங்குச் செல்லினும் உன் இயல்பு உன்னுடனிருந்து வருவதால், அத் தூய தியாகவழியே எதிர்ப்படும்.

மேலும் கீழும், உள்ளும் புறமும், எப்பக்கம் திரும்பினும், தியாக நெறியையே காண்பாய். உள்ளத்திலே அமைதி வேண்டுமானால், அழியா ஆனந்த மகுடம் அணிந்து இன்புற வேண்டுமானால், அளவற்ற பொறுமையைக் கைவிடாது எப்போதும் இருக்க வேண்டுவது இன்றியமையாதது எனக் காண்பாய்.

5. தியாக நெறியை மகிழ்ச்சியுடன் பின்பற்றுவாயானால் அது உன்னைக் காத்துத் தாங்கி, துன்பம் இன்றி இங்கிராவிட்டாலும், துயர் இல்லாத திவ்ய நிலையாகிய நாம் கோரும் நன்னிலைக்குக் கூட்டிச் செல்லும்.

வெறுப்புடன் அந்நெறியில் செல்வதால் நீ ஒரு பாரத்தை உனக்கே உண்டாக்கிக் கொள்கிறாய். உனது சுமையை நீயே மிகுதிப்படுத்திக் கொள்கிறாய். எப்படியும் அதை நீ சுமந்தே தீரவேண்டும் என்பதை அறி.

ஒருவகைத் தியாகத்தைச் செய்யாது விட்டாயானால் மற்றொன்று கண்டிப்பாய் எதிர் நிற்கும். அதுமுன்னையதைவிட மிகப் பளுவானதாகவே இருக்கலாம்.

6. உலகிற் பிறந்த எந்த மனிதனாலும் எக்காலத்திலும் தவிர்க்க முடியாததை விட்டு நீ தப்பி ஓடவா விரும்புகிறாய்? உலகத்தின் பெரியார்கள், மகாத்மாக்களில் எவர் தொந்தரவும், துன்பமும் இல்லாது வாழ்ந்தார்?

தெய்வீக அவதார புருஷர்களும் கூட உடல் தாங்கி இருக்கும்வரை ஒருமணி நேரம் கூடப் பிறர்க்குரியாளராக வாழும் பெருந் துயரினின்றும் நீங்கியிருந்தனரல்லர். உலகின் வழிகாட்டிகளான உத்தமரும் துயருழந்தே ஆகவேண்டும்; இறந்தபின் மீண்டும் உயிர்பெற்றெழுந்து தெய்வீக கீர்த்தியுடன் அமரத்வம் அடையவேண்டும் என்பதே இறைவனது திருவுள்ளம்.

இறைவன் நடந்து காட்டிய வழியாகிய இந்த அரசபாதையன்றி வேறு பாதையை நீ ஏன் தேடுகிறாய்.

7. உலகத்தை உய்விக்க வந்த அருளாளர்களின் வாழ்க்கை முழுதுமே துயர மயமாகவும் பிறர்க்கெனத் தம் உயிரையும் ஈயும் தீரமயமாகவும் இருக்கிறபோது, நீ உனக்கு மட்டும் அமைதியும் மகிழ்ச்சியும் வேண்டும் என்று தேடுகிறாயா?

(தொடரும்)

மனிதன் ஆன்மா

A. C. (இலஞ்சி)

"தன்னையறிந் தின்பமுற வெண்ணிலாவே,
ஒரு தந்திரம் நீ சொல்லவேண்டும்
வெண்ணிலாவே"!

"தன்னை யறிந்தார் தலைவனை யறிந்தார்" என்பன நம் நாட்டு ஞானியரின் கூற்றுக்கள். "உன்னையறி" என்பது பண்டைக் கிரேக்க ஞானியரது உபதேச மொழி. "உள்ளே மறைந்துள்ள ஒளியை அறி" என்பது பண்டைய எகிப்தியரின் ஞான உரை. இந்த உள்ளொளியை, உண்மையாகிய தன்னை, அறிவதற்காகவே தானல்லாத உடம்புகள் முந்திய கட்டுரையில் தொகுத்து விளக்கப்பட்டன; அந்த உடம்புகளைத் தானாகக் கொள்ளும் மயக்கமும் எடுத்துரைக்கப்பட்டது. ஆயினும் அந்த உடம்புகளையே நன்கு விளக்க ஒண்ணாதபோது, அந்த உடல்களுக்கெல்லாம் அப்பாற் பட்டதும், அவற்றிற்கு உயிராயிருப்பதும், அவற்றை ஆட்டுவிப்பதுமான ஆன்மாவைப் பற்றி எவ்வாறு கூற இயலும்? ஆனால் அறிய முடியாத தொன்றில் யாருக்கும், மனம் பற்றுவதில்லை; பற்று இல்லாத இடத்து அன்பு உண்டாவதில்லை, அன்பு இல்லாதபோது ஒழுக்கமும் அதனாலாகும் இன்பமும் இல்லாதுபோம். அதனை எண்ணியே அனுபூதிமான்கள் ஆன்மாவைப் பற்றியும் கடவுளைப் பற்றியும் இயன்றவரை நமக்கு அரைகுறையாகப் பல நாட்டிலும் பல மதங்களிலும் பல சமயங்களிலும் கூறியிருக்கின்றனர். ஆனால் இந்த அரைகுறை விளக்கத்தை அந்த மதத்தவர் பூரண அறிவென்று கொண்டு விடுவதே உலகெங்கும் காணப்படும் ஓயாத சமயப் பூசல்களுக்குக் காரணமாயிருப்பதால் அதனை ஒரு சிறிது ஆராயவேண்டியதாகின்றது.

கடவுள் என்ற சொல் உள்ளத்தைக் கடந்தது, மனம், மொழி, மெய்களுக்கப்பாற் பட்டது, தத்துவங்கள் அனைவற்றையும் கடந்து நிற்பது, உள்ளுக்குள்ளே கடந்து போய் அனுபவிக்க வேண்டுவது, எனப் பலவகையான பொருள்களைக் கொண்டது. அவற்றுள் ஒவ்வொன்றும் உண்மையான பொருளேயாம். அவ்வாறு எல்லையற்றதொன்றை எல்லைக்கு உட்படுத்தி விளக்க முயலும்போது அந்தப் பரந்த பொருளின் ஒரு அணுவத்தனை துகளையே எடுத்துக் கூறமுடியும். சமீப காலத்திலிருந்த அனுபூதிமானாகிய பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் இந்த உண்மையை விளக்கும் போது, "உண்மையை, அதாவது கடவுளை, இமயம் போன்ற கற்கண்டு மலையாகக் கொண்டால், அதில் இதுவரை மக்கள் கண்டுபிடித்துள்ளது ஒரு சிற்றெறும்பு கடித்தெடுக்கும் அளவேயாகும்" என்று நகைச்சுவை ததும்பக் கூறியுள்ளனர். இதனை விளக்க நமக்குள் பல கதைகள் இருக்கின்றன. நான்கு பிறவிக் குருடர்கள் யானை பார்க்கச் சென்றனர். அவருள் காலை மாத்திரம் தடவிப் பார்த்தவன், யானை மரம் போன்றதென்றான்; துதிக்கையைத் தடவினவன் யானை உலக்கை போன்றதென்றான், காதைத் தடவிப்பார்த்தவன் யானை முறம் போன்றதென்றான், உடம்பைத் தடவிப் பார்த்தவன், அது மலைபோன்றதென்றான்; அவர்களுக்குள் வாதம் அவர்கள் இறக்கும் வரை ஓயவேயில்லை. இந்தக் கதை உலகச் சிறுவரெல்லோரும் அறிவர். ஆயினும் மக்கள் அதன் உட்பொருளை உணர்வதில்லை. கண்ணுடையவனுக்குக் குருடர் கண்டவை யாவும் யானையின் பாகங்களேயென்றும், யானை அவற்றிற்கும் மேற்பட்டதென்றும் நன்கு தெரியவரும். மலையின் நாலு வெவ்வேறு சரிவுகளில் நால்வர் நின்று, அவரவர் காணும் மலையை எழுதிவைத்துச் செல்வாரானால் அவை ஒன்றுக்கொன்று ஒவ்வாதன ஆகவே இருக்கும். ஆனால் மலையுச்சியில் நின்று பார்ப்பவனுக்கு அவையாவும் உண்மையென விளங்கும். அவ்வாறே அனுபூதிமான்கள் மக்களுடைய சிற்றறிவையும் சிறுதொழிலையுங் கருதி, தாம் அமைத்த ஒவ்வொரு மதத்தில் இறைவனுடைய ஒவ்வொரு தன்மையை அழுத்தமாக விளக்கி வைத்தனர். மலையடிவாரத்தில் எந்த இடத்திலிருந்து மேல் நோக்கி ஏறினாலும் மலையுச்சியை அடைவது திண்ணம். அதற்காக மலையின் வட பாரிசத்திலுள்ளோர் வட்டஞ் சுற்றிக் கீழ்ப்பக்கம் மேல்பக்கஞ் சென்று ஏறவேண்டுமென்பதில்லை. அது போலவே அந்தந்த நாட்டுக்கு எளிதாயுள்ள இறைவனுடைய அருங்குணங்களை அவருக்கமைத்த மதத்தில் அப்பெரியார் விளக்கி வைத்தனர்; அந்த முறையைப் பின்பற்றுவதே இறைவன் திருவடியைச் சென்று சேரப் போதுமானதென்பது இன்று ஸ்ரீ ராமகிருஷ்ணராலும் அனுபவ வாயிலாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. அம்மகாபுருஷர் சாக்தம், சைவம், வைஷ்ணவம், கிறிஸ்தவம், மகம்மதியம், பௌத்தம் ஆகிய இன்றைய எல்லா மதங்களையும் தனித்தனியே பின்பற்றி அவையனைத்தும் ஒரே முடிவு நிலைக்குக் கொண்டு சேர்ப்பதைக் கண்கூடாகக் காட்டி வைத்தனர். அம்மா

திரியான அவதார புருஷர்கள் பண்டைய கிரேக்க மக்களுக்கு அழகையும், பண்டைய எகிப்தியருக்கு அஞ்ஞான இருளை அகற்றும் ஒளியையும், பண்டைய பாரசீகருக்குப் பரிசுத்தத்தையும் அதனை ஆக்கவல்ல அக்னியையும், பண்டைய ரோமருக்கு விதி, ஒழுங்கு என்பன வற்றையும், பௌத்தருக்குத் தன் முயற்சியையும் நியதியையும், ஜைனருக்கு ஜீவகாருண்யத்தையும், கிறிஸ்தவருக்கு சேவையையும், மகம்மதியருக்கு இறைவன் வல்லமை, அவன் திருவுள்ளத்திற்குப் பணிவு என்பவற்றையும், இந்துக்களுக்குப் "பார்க்குமிடமெங்கும் பரமன் காணம்மானே" என்ற இறைவனது அந்தரியாமித்துவம் முதலியவற்றையும், இறை உருவாக வகுத்து வைத்தனர். இவற்றுள் ஏதேனுமொன்றை ஒழுங்காகப் பின்பற்றுபவர் எவரும் இறைவனடி சேர்வது திண்ணமென்பதை அவர்கள் சுய அனுபவத்தால் அறிந்திருந்ததனாலேயே இவ்வாறு செய்து வைத்துப்போயினர். அல்லாது, பின்வரும் மக்கள் அவரவர் நடை முறையைக் கைவிட்டுப் பிறரோடு வாதாடிக் கொண்டிருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடல்ல.

இனி, அப்பெரியார் அவ்வாறு செய்து வைத்தமைக்கு வேறொரு காரணமும் காணலாம். பல மரங்கண்ட தச்சன் ஒரு மரமும் வெட்டமாட்டான்; கிணற்றை ஆழத்தோண்டினாலன்றி அகலத்தோண்டித் தண்ணீரை அடைவாரில்லை; இவை உலக இயல் அனுபவங்கள். அதனால்' இறைவனுடைய அநந்த கல்யாண குணங்களை ஏகமாகக் காட்டிச் சிற்றறிவுடைய மக்களின் மனத்தைக் குழப்பாவண்ணம், இறைவனைச் சிறப்பாக ஒரு முறையிலேயே வழிபடும்படி, அவருக்கேற்ற மதங்களை அமைத்தனரென்பதும் பொருந்தும். ஆயினும், உலகம் பலவிதமாகையால், வெவ்வேறு சிறப்புக் குணங்களைப் பின்பற்ற விரும்புவோருக்கும் ஒவ்வொரு மதத்திலும் இடம் அமைக்கப் பட்டிருக்கின்றது. அந்த ஏற்பாடுகளே உபாசன மூர்த்திகள், வழிபடு தெய்வங்கள் என்று அழைக்கப்படுவன. நம் நாட்டில் சிவாலயத்தை எடுத்துக் கொண்டால், அன்பு, அருள் இவற்றின் உச்ச நிலையைச் "செம்மைத் தன்மை" என்ற 'சிவம்' என்றும், பக்தியை நந்தியாகவும், ஆற்றலை நடேசராகவும், சக்தியை அன்னையாகவும், ஞானத்தை தக்ஷிணாமூர்த்தியாகவும், சாந்தத்தை விநாயகராகவும், அழகையும் வீரியத்தையும் முருகனாகவும், வீரத்தைப் பைரவராகவும் உபாசன மூர்த்திகளாகக் கொள்ள ஏற்பாடு செய்திருப்பது எளிதில் விளங்கும். ஆயினும் நம் பலவேறு வழிபாடுகளின் முடிவு நிலை, "சர்வம் பிரம்மமயம்", "பார்க்குமிடமெங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தமே" என்ற அனுபூதி நிலையேயாகும்.

இதுவன்றி, ஒரு சாரார் இறைவனை உருவத்தில் வழிபடுவர், மற்றொரு சாரார் அவரை அருவமாகக் கொள்வர், வேறொரு சாரார் அவரை அருவுருவாகவும் கொண்டாடுவர். இந்த ஏற்பாடுகளும் அந்தந்த மக்களுடைய இயற்கை மனப்பான்மைக்குத் தக்கபடியே வகுக்கப்பட்டுள்ளனவாம். இறைவன் எல்லா நிலையிலும் இருக்க வல்லவனாகையால், இவையனைத்தும் உண்மை பொதிந்தவைகளேயாம். இந்த உண்மையும், சர்வ சந்தேகம் பிடித்த இந்நூற்றாண்டில், பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரால் தமது சுய அனுபூதியிலிருந்தே விளக்கப்பட்டிருப்பதும் அவருடைய வாழ்க்கை வரலாற்றை வாசித்துள்ளவர் யாவரும் அறிவர்.

இனி கடவுளைப் பற்றி இத்தகைய கொள்கை வேறுபாடுகள் இருந்து வருவது போலவே ஆன்மாவைப் பற்றியும் வேறுபட்ட கொள்கைகள் இருந்து வருகின்றன. இந்த ஆன்மாவின் இயல்பை உள்ளபடி நேரிற் கண்டறிந்த அனுபூதிச் செல்வர், அதனை மூன்று வகையில் விளக்க முயன்றிருக்கின்றனர். ஆன்மா பரம் பொருளுக்கு அடிமை என்பர் ஒரு வகையார்; ஆன்மா பரம்பொருளின் அம்சம் என்பர் இன்னொரு வகையார். ஆன்மா பரம்பொருளே என்பர் மூன்றாவது வகையார். அனுபூதிமான்கள் அனைவரும் பரம்பொருட் கடலில் மூழ்கியவரேயாவர்; மனமெனும் வாயிலைக் கடந்து ஆலயத்துட் சென்றவருக்கே அனுபவம் வருவது; அது துரிய நிலை, துரியாதீத நிலை; அங்கு மோனமே உண்டு; அது அவர் அனைவருக்கும் ஒப்ப முடிந்ததொன்று.

ஆனால் அங்கிருந்து அவர்கள் நனவு நிலைக்கு இறங்கித் தம் அனுபவத்தை விளக்க முயலும் போதே வேறுபட்ட பொருள்கள் நமக்குக் காணப்படுகின்றன. எனெனில் அறிவு, இச்சை, செயல், என்பன மனிதனுடைய முத்தன்மைகள் என்பது முன்னே கூறப்பட்டது. மெய், வாய் கண் மூக்குச் செவி ஆகிய ஐம்புலன்களையும் ஒரே நேரத்தில் முழு பலத்துடனும் இயக்குவது நமக்கு இயலாதது போல, இம்மூன்று தன்மைகளையும் ஒரே சரிசம நிலையில் உபயோகிப்பவர் இலரென்றே சொல்லலாம். அவ் அனுபூதிமான்களில்,

கனவு நிலையில் அறிவை, அதாவது ஞானத்தை வாயிலாகவும் இச்சை செயல் களைப் பலகணிகளாகவும் கொண்டு தம் அனுபவங்களைக் காண்பவர், ஆன்மா பரம் பொருளே என்பர். இச்சையை வாயிலாக வும் மற்ற இரண்டையும் பலகணிகளாகக் கொண்டு அவற்றைக் காண்பவர், ஆன்மா பரம் பொருளின் அம்சம் அல்லது அங்கம் என்பர்; கிரியை அல்லது செயலை வாயிலாக வும் மற்ற இரண்டையும் பலகணிகளாவும் வைத்து இறைவனை நோக்குவோர், ஆன்மா வைப் பரம்பொருளின் அடிமையென்பர். அதனால், அனுபவம் சிறிதுமில்லாத சிற்றறி வுடைய நாம் இக் கொள்கைகளைப் பற்றி வீண்வாதம் பண்ணிக் கொண்டிருப்பதை விட்டு அவரவர் மனதிற் கிசைந்ததைக் கடைப்பிடித்து, அநுபூதி நிலையடைய முயற் சிப்பதே ஆண்மையும் அறிவுடைமையு மாகும்; ஏனெனில், மனிதனுடைய இன்ப வாழ்க்கைக்கு இன்றியமையாதவை, முத லாவது ஒழுக்கமும், இரண்டாவது சாதனமு மாம். இவ்விரண்டையும் நடைமுறையில் கொண்டுவருவதற்கு எக்கொள்கை அவனை ஊக்கப்படுத்தி உதவுகின்றதோ அதுவே அவனுக்கு உரிய கொள்கை. பிறர் எக் கொள்கையைக் கொள்கின்றாரென்பது இவ னுடைய வேலை யல்ல.

"அவா இல்லார்க்கில்லாகும் துன்பம்."
"அருளிலார்க்கவ் வுலகமில்லை."

"தவஞ் செய்வார் தங்கருமஞ் செய்வார்."

என்பன எவராலும், எம்மதத்தாராலும், எக் கொள்கையாராலும் எந் நாட்டாராலும், மாற்றவும் மறுக்கவும் ஒண்ணாத இயற்கை நியதிகள். இங்கு "கருமம்" என்பதனை, முன் வினையால் ஏற்பட்ட கடமை, எனப்பொருள் கொள்க. "அவ்வுலகம்," பேரின்ப உலகம். இவ்விதிகளை, அவாவில்லார்க்குத் துன்ப மில்லை.

"அன்பில்லார்க்கு இன்பமில்லை".
"கடமை செய்வார்க்குக் கருமமில்லை".

அதாவது மேல் வினையில்லை, ஆகாமியகர்ம மில்லை, என்று மாற்றியுங் கூறலாம். அத னால், நாளுக்கு நாள் அவாவினைக் குறைக்க எது உதவுமோ, நாளுக்கு நாள் அன்பைப் பெருக்க எது உதவுமோ, விருப்பு வெறுப் பின்றித் தத்தம் கடமைகளை இயற்ற எது தூண்டுமோ, அது பக்தி, ஞானம், கருமம், யோகம் போன்ற எம்மார்க்க மாயினுஞ் சரியே, வேதாந்த, சித்தாந்த துவைத அத் வைத ஏக கொள்கையாயினுஞ் சரியே, இந்து, பௌத்த, கிறிஸ்தவ, மகம்மதிய எம் மதமாயினுஞ் சரியே, அதுவே அவனுக்கு ஆலயக்கதவைத் திறக்க ஏற்பட்ட திறவு கோலாகும். இங்ஙனம் தினசரி வாழ்க் கைக்கு உதவாத கொள்கை வறட்டுக் கொள் கையாம்; அது வெறும் வாய் ஞானம், கறிக் குதவாத ஏட்டுச் சுரைக்காய், விதண்டா வாதத்திற் அமைந்த வீண் கருவி.

இறைவன் ஆன்ம நிலைகளைப் பற்றி பக வான் இராமகிருஷ்ணர் கூறியுள்ள சுவை மிகுந்த கதையாவது: ஒரு உப்புப் பொம்மை கடலைப்பற்றிக் கேள்விப்பட்டது. சென்று காண ஆசைப்பட்டது. கண்டதும் மெய் மறந்து நின்றது (துவைதம்). கொஞ்சம் நீரை எடுத்து நாவில் ஊற்றியது. அப்போது அது வும் தானும் ஒரே உப்புத்தானென்று உணர்ந் தது (விசிஷ்டாத்வைதம்). அந்த உப்பு நீருக் குள் என்ன இருக்குமென்று ஆசைகொண்டு உள்ளே இறங்கிற்று. அப்போது கரைந்து கடல் நீரோடு ஒன்றிவிட்டது (அத்வைதம்)— என்பதேகதை.

இனி, மேலே சொன்னபடி அவாவைக் குறைத்து அன்பைப் பெருக்கிக் கடமையைச் சரிவரச் செய்ய முயலுவோருடைய குறி குணங்கள் ஞான நூல்களில் சாதன சதுஷ் டயமாக விளங்கக் கூறப்பட்டிருக்கின்றன. அதன்படி நடக்க வல்லவர் முத்தி நெறியில் இறங்கியவரே யாவர்; நடக்க முயல்பவர் பேரின்பத்திற் பேரவாக் கொண்டவராவர். சிவாலயங்களில் நந்திப் பெருமானுடைய அனுமதியில்லாத போது சிவதரிசனமும் அதன் பலனாகிய சிவப் பேரின்பமும் அடி யார்கள் அடையார், என்று ஆகம நூல்கள் கூறுகின்றன. நந்திதேவர் தமக்கு ஆதார மாக ஊன்றி நிற்கும் நான்கு கால்களும் நான்கு வேதங்களையும் நான்கு தகுதிகள் குணங்களையும் குறிக்கும் என்பர்; நான்கு சாதனங்களைப் பழகுவோருக்கே அவரு டைய அனுமதி கிட்டுமென்பது அதன் கருத் தாகும். அந்த சாதனங்களை விளக்கும் நூல் களை அனுசரிப்பவர் குருவின் திருவடியை அடுத்தவராவர், சிவதரிசனத்திற்கும் அருக ராவர்.

இன்பமாலை

(157-ம் பக்கத் தொடர்ச்சி)

27. அரிய தாகிய தனது வன்மையை
யகில நின்றுத ரித்திடா
துரிய தாம்வகை யொருவ னுக்கிதை
யுதவல் காரிய மென்றுளம்
பெரிய நாயகி கருதி நேர்பொரு
பிஞ்ஞ கன்றுணை யாயினள்
தெரிய நாடிடி னவன வட்களி
திறமை யாவது மில்லையே.

(பொ-ரை) பெரியநாயகி யாகிய தேவி, தாங்கலரிதாகிய தனது சத்தியை எல்லாவுலகங்களும் நிலைபெறப் பொறுக்கமாட்டா, இச்சத்தியை ஒருவனுக்கு உரியதாகும்படி அளித்தல் செய்யத்தக்க காரியமாகும் என்று கருதி தனக்கு நேரொத்த சிவபெருமானுக்குத் (தன் சக்தியை அளித்து) அவனுக்கு உதவியாயினள் (மனைவியாயினள்); தெரிய ஆராய்ந்தால், அச் சிவபெருமான் அத்தேவிக்கு அளிக்குந் திறமையாவதும் இல்லை; எ-று.

[வன்மை—வல்லமை. அகிலம்—எல்லாவுலகும். பொரு—ஒத்த. பிஞ்ஞகன்—சிவன். துணை—உதவி. மனைவி.]

சிவபெருமான் தன்னளவில் சத்தியுடையவன் அல்லன் என்பது; அறிவும் வல்லமையும் பிரிக்கப்படா வண்ணங் கலந்திருப்பதே பரம்பொருள். வல்லமையோடு கூடிய அறிவைச் சுட்டும்பொழுது சிவன் என்றும் அறிவோடு கூடிய வல்லமையைச் சுட்டும்பொழுது சத்தி என்றும் கூறுவர். சத்தியைச் சிவனுக்கு மனைவி யென்பது சிவனும் சத்தியும் (அறிவும் ஆற்றலும்) பிரியாதிருப்பதை நோக்கி.

28. இம்மை யோடெதிர் மறுமை யின்கணு
மெய்து மின்பயன் யாவதுஞ்
செம்மை யாகிய பொருளெ னத்திகழ்
திருவு மெண்ணிய சித்தியுந்
தம்மை நாடிட விழையு மேலவர்
தலைமி சைக்கொடு சூடுவர்.
எம்மை யுந்துணை யாய நாயகி
யிணைய டிக்கம லங்களே.

(பொ-ரை) இப்பிறப்பிலும் எதிர்வரும் மறுபிறப்பிலும் (இறந்தபின் எய்தும் வாழ்விலும்) அடையப்படும் இனிய பயன்கள் அனைத்தும் செம்பொருள் என விளங்குஞ் செல்வமும் (வீடுபேறு ஆகிய செல்வமும்) தாம் கருதுகின்ற சித்திகளும் (வலிதில்) தம்மை அடையும்படி விரும்பும் மேலோர், எப்பிறப்பிலும் துணையாயுள்ள தலைவியான தேவியின் இரண்டு பாதங்களாகிய செந்தாமரை மலர்களைத் தலைமேற் கொண்டு அணிவர்; எ-று.

[விழையும்—விரும்பும். தலைமிசைக் கொடு—தலைமேற் கொண்டு. எம்மையும்—எப்பிறப்பிலும்.]

29. மதன னெய்திடு மைந்தெ ழுத்துமோர்
வலிமை செய்கில மாமலர்
விதன வில்லுவி ளைப்ப தொன்றில
விதுவ சந்தமொ டார்கலி
இதன ளித்திடு தென்ற லும்பிற
வென்பு ரிந்திட வல்லவாம்
கதன கன்றொளிர் கயனி கர்த்திடு
கண்ணி தண்ணரு ளின்றியே.

(பொ-ரை) சினம் அற்று விளங்குகின்ற கயல்மீனை ஒக்கும் கண்களை யுடையவளான தேவியின் அருள் இல்லாமல், மன்மதன் ஆடவர் பெண்டிர் என்பார் மேல் எய்யும் ஏ, ஐ, அ, இ, உ, என்னும் ஐந்து மந்திர எழுத்துக்களும் ஒரு வன்மையையும் செய்யமாட்டா; அவன் எய்யும் சிறந்த மா, அசோகு, முல்லை, நீலம், தாமரை என்னும் ஐந்து மலர்களாகிய அம்புகளும், காமத் துயரைத் தரும் அவனது கரும்பு வில்லும் விளைப்பதொரு பயன் இல்லை; அவனது குடையாகிய சந்திரனும் அவனுக்குத் தோழமை பூண்ட இளவேனிலும் அவனது முரசமாகிய கடலும் அவன் தேராகிய இன்பத்தைத் தருந் தென்றற் காற்றும் பிறவும் என்ன செய்ய வல்லமை யுடையனவாகும்? (தேவியின் அருளன்றாயின், மன்மதனுக்கு ஐந்தெழுத்து முதலியவை பயன்படமாட்டா); எ-று.

[மதனன்—மன்மதன். விதனம்—வருத்தம். விது—சந்திரன். இதன்—இன்பம். ஆர்கலி-கடல். கயல்—சேல் மீன். நிகர்த்திடு—ஒத்திடும். கதன்—சினம். பிற என் புரிந்திட என்றும், கதன் அகன்று ஒளிர் கயல் நிகர்த்திடு என்றும் பிரிக்க.]

30. கடலு ருவமு தன்ன மேனியள்
கண்கள் வாயமு தம்பொழி
மடவ ரற்றுணை மருவி டானெனின்
மலிபு யங்கம ணிந்தவன்
இடரு றும்படி வந்த மாவிட
மினிதி னுண்டிவ ணின்றளை
வடலு றத்தன துயிர்பொ றுத்துல
காள வுந்தனி வல்லனே.

(பொ-ரை) கடலில் தோன்றுத அமுதத்தை ஒத்த இனிய மேனியை யுடையவளும் கண்கள் (அருட்பார்வை யாகிய) அமுதத்தையும்

வாய் (இன்சொல்லாகிய) அமுதத்தையும் பொழியும் இளையாளும் (கன்னியும்) ஆகிய தேவியாகிய துணையைப் பெருஞயின், மிகுந்த பாம்புகளை அணிந்த சிவபெருமான் உலகம் எல்லாந் துன்பத்தை யடையும்படி பாற்கடலில் தோன்றிய கரிய நஞ்சை இனிதாக உண்டு, இங்கு இன்றுவரை தன் உயிர் தாங்கி வல்லமையுடன் உலகாளவுந் தானுக வல்லமையுடையவன் ஆவனே? எ-று.

[மடவரல்—பெண் (தேவி). மருவிடான்—பொருந்தான். புயங்கம்-பாம்பு. இடர்—துன்பம். இவண்—இங்கு. அடல்—வலிமை. பொறுத்து—தாங்கி. கடல் உரு அமுது அன்ன..மடவரல் துணை..இனிதில் உண்டு இவண் இன்றளவு அடல் உற..எனப் பிரிக்க.]

தேவி அமுத நீர்மையளாகையால், சிவனை நஞ்சு யாதுந் துன்புறுத்த இயலாதாயிற்று என்க.

31. அருளி லங்கிடு மமைய மண்டமொ
   டகில முற்றதொர் சத்தியாம்
பொருளி லங்கிடு பொழுதி லேசிவ
   போத மாய்நிகழ் தற்பரன்
இருளி லாதெழு மகவு தாயொடு
   மிற்கி ழத்தியெ னச்சொலத்
தெருளி லேநிறை சத்தி யெம்முறை
   தேவ னுக்கென லாவதே.

(பொ-ரை) பராசத்தி, அருள் விளங்கி நிற்குங் காலத்தில் அண்டங்களோடு எல்லாவிடத்தும் பொருந்தி இருப்பதாகிய ஒப்பற்ற சத்தியாம்; செம்பொருளாய் (வஸ்துவாய்) விளங்கும் பொழுதில் சிவபோதமே வடிவாய் நிகழும் தற்பரனும் (சிவனும்); சிவபெருமானுக்கு மயக்கமின்றித் தோன்றும் மகவு என்றும் தாய் என்றும் மனைவி என்றும் சொல்லும்படி ஞானத்திலே நிறைந்து விளங்கும் தேவி அவனுக்கு எம்முறையை யுடையவள் என்று (வரையறுத்துச்) சொல்லுதல் ஒருவரால் ஆகுமோ? எ-று.

[இலங்கிடும்—விளங்கும். பொருள்—ஞானம். இல்கிழத்தி—மனைவி. தெருள்—ஞானம். தேவன்-சிவன். அமையம்—சமயம், காலம். அருள் இலங்கிடும் அமையம் அண்டமொடு அகிலம் உற்றதோர்—எனப் பிரிக்க.]

32. தேவி மெய்த்திரி சூலி யந்தரி
   திகழ்நி ரந்தரி சுந்தரி
காவி யங்கணி காளி சங்கரி
   கதழு நீலிக பாலியே
தீவி ளங்குகண் மகிட மர்த்தினி
   திரிபு ரந்தெறு கன்னியெம்
ஆவி யேயெனின் மறவ ருட்டுணை
   யாவ ளம்பிகை யெளிதலே.

(பொ-ரை) தேவியே உண்மையான (பயன்பாடு உடைய) திரிசூலியே, அந்தரியே, விளங்குகின்ற நிரந்தரியே, சுந்தரியே, நீலோற்பலம் போன்ற அழகிய கண்களை யுடையவளாகிய காளியே, சங்கரியே, கோபிக்கின்ற நீலியே, கபாலத்தை யுடையவளே, தீப்போல விளங்குங் கண்களை யுடைய மகிடாசுரனை மிதித்து அழித்தவளே, முப்புரங்களையும் அழித்த கன்னியே, எங்களுடைய உயிரே என்று துதித்தால், அம்பிகை எளிதில் மற அருளைச் செய்யுந் துணையாவள்; எ-று.

அம்பிகையைக் காளியாக வணங்கின் கொடுந் தொழில் வகையால் பகைவர்களை அழித்தல் முதலியவற்றின்பொருட்டு விரைவில் அருள்வள் என்க.

[காவி—நீலமலர். அங்கணி—அழகிய கண்களை உடையவள். கதழும்—விளங்கும். தெறு—அழித்த. மற அருள்—கொடுமையைக் காட்டிச் செய்யும் அருள்.]

33. அடிகள் பிரணவ முடல முதுமறை
   யங்க மங்கமெ னப்பெறும
படிய றுஞ்சுக நிலைய மேதலை
   பாவை யன்ன பராபரைக்
கொடிவ ருங்குல மறைய வர்க்குள
   மொளிர்த னிச்சுட ராகிமுப்
படிய வர்க்குயி ராவள் வானவர்
   பரவி டுஞ்சிவ காமியே.

(பொ-ரை) பாவை போன்ற பராசக்திக்குப் பாதங்கள் ஓங்காரமாம், உடம்பு பழைய வேதமாம், உறுப்புக்கள் வேதாங்கங்களாகிய கற்பாதிகள் எனப்படும், தலை ஒப்பற்ற இன்ப நிலையமேயாம்; தேவர்கள் துதிக்குஞ் சிவகாமி என்னும் பெயருடைய அரசதேவி, அழிவு அற்ற சிறந்த வேதத்தைப் பயிலும் (வேத நெறிப்படி ஒழுகும்) முனிவர்களுக்கு உள்ளத்திலே விளங்கும் ஒப்பற்ற சுடராகி மூன்று உலகத்தவர்க்கும் உயிராவள்; எ-று.

[முது மறை—பழைய வேதம். அங்கம்—அவயவம். அங்கம்—வேதாங்கம். படி யறும்—ஒப்பு இல்லாத. ஒடிவரும்—அழிவிலாத; கடமைகளில் நீக்கமில்லாத. மறையவர்—வேத முனிவர். ஒளிர்—விளங்கும். படியவர்—உலகத்தவர். பரவிடும்—துதிக்கும். பிரணவம் உடலம் முது மறை... பராபரைக்கு ஒடிவரும்..மறையவர்க்கு உளம் ஒளிர்-எனப் பிரிக்க.]

34. இமைய வர்க்குள மினிமை மேவிட
   விலகு சீரபி ராமிதன்
அமைவ ரும்பணி வட்ட வெல்லையி
   னவ்ர்ச ராசர நின்றிடும்
கமைவ ரும்பர பத்தி மேவிய
   கவிக டம்மித யத்தினில்

உமைபொ ருந்தி யிருப்ப துன்னிடி
லுண்மை யாகவி யப்பதே.

(பொ-ரை) விளங்கும் சரம் அசரம் என்னும் இருவகைப் பொருள்களும், தேவர்க்கு உள்ளம் இன்பமுறும்படி விளங்கி வாழும் சிறப்புப் பொருந்திய அபிராமி (பேரழகையுடைய தேவி) யின் பொருந்த நிகழும் (பிறரால் அமைத்த லரிய) கட்டளை யாகிய சக்கரத்தின் வரம்பிற்குள் (நியமன சக்கர வரம்பினுள்) நிற்கும்; அவ்வுமா தேவியானவள், சிறந்த பத்தி பொருந்திய பொறுமையையுடைய (பொறுமையாகிய குணத்தால் பொருந்தும் பரபத்தியை யுடைய) புலவர்களுடைய உள்ளத்தில் பொருந்தி வாழ்ந்திருப்பது, உண்மையாக, அதிசயமேயாம்; எ-று.

[இமையவர்—தேவர். இலகு—விளங்கும். அபிராமி——பார்வதி. பணி—=கட்டளை. கமை—பொறுமை. உன்னிடில்—நினைத்தால். வியப்பு—ஆச்சரியம். இமையவர்க்கு உளம் இனிமை.. இலகு சீர்..கமை வரும்..கவிகள் தம் இதயத்தினில்—எனப் பிரிக்க.]

35. எவ்வு யிர்க்குமொர் தாயெ னத்தகு
மிறைவி பாதச ரோருகம்
இவ்வு டற்பிணி யெளித கற்றிடு
மின்ப நல்லுண வுதவிடும்
தெவ்வு டற்றிடு மென்று ஞானியர்
தெளிவி னேடக முள்ளுவார்
செவ்வு டம்பணி தேவ மங்கையர்
செயல றப்பணி வார்களே.

(பொ-ரை) எல்லா வுயிர்கட்கும் ஒப்பற்ற தாய் என்று சொல்லத் தக்க தேவியின் திருப்பாத தாமரைகளை இவ்வுடம்பில் உண்டாம் நோய்களை (உடம்பு பெறுத லாகிய பிறவி நோயை) எளிதாக நீக்கிவிடும், இன்பமாகிய (வீடுபேற்றின்ப மாகிய) சிறந்த உணவை அளித்திடும், பகைகளை (காமக் குரோதாதியாகிய பகைகளை) அழித்திடும் என்று கருதி ஞானிகள் (அவற்றை) தெளிவுடன் மனத்தில் வைத்துத் தியானிப்பார்கள்; நேர்மையான சரீரத்தை யுடைய அழகிய தேவ மாதர்கள் வேறு செய்கைகள் நீங்கப் (ஒருமைப்பட்ட கருத்துடன், தற்போத மற) பணிவார்கள்; எ-று.

[சரோருகம்—தாமரை. அகற்றிடும்—நீக்கும். தெவ்—பகை. உற்றிடும்—அழிக்கும். உள்ளுவார்—தியானிப்பார். பிணி எளிது அகற்றிடும்.. தெவ் உடற்றிடும்..தெளிவினேடு அகம் உள்ளுவார்..—எனப் பிரிக்க.]

இந்துமத ஸாரம்

(186-ம் பக்கத் தொடர்ச்சி)

அத்தியாயம் 20

கிரியைகளும் புராணமும்

இந்து மதத்திற்கு அடிப்படையான ஞான உண்மைகளை முந்திய அத்தியாயங்கள் நமக்கு அறிவிக்கின்றன. இவையே அம்மதத்தின் வைரமனைய உட்பகுதி எனப்படுவனவாம். மற்றவை அவ்வுண்மைகளை மக்களது அறிவில் நன்கு பதியவைத்தற் கென அமைந்த வெறும் வெளிப்பகுதிகளாம். கிரியைகளும் புராணமும் அம்மாதிரியான வெளிப்பகுதிகளே.

நாம் முன்னமே கூறியுள்ளபடி, ஞான உண்மைகள் உணர்தற்கு மிக அரியவை. கூரிய புத்தியைக் கொண்டும் அவற்றின் உட்கருத்தைப் பற்றுதல் மிக்க சிரமந் தருவதாகும். மேலும், அவற்றை அறிவால் ஓர்தலொன்றே ஞான உலகில் ஒருவனை வெகுதூரம் புகவிடாது. சாஸ்திரங்களை மேற்கோள்களாக எடுத்துக் காட்டவோ, ஞான விஷயங்களைப்பற்றிச் சுலபமாகப் பேசுதலோ நாம் கருதும் முடிபன்று. ஞான வளர்ச்சியை எய்தவேண்டின் இவ்வுண்மைகளை ஒருவன் அறிதல் மட்டும் போதாது; அவற்றை நேராகக் காணும்வரை அவன் தனது வாழ்வையும் ஒழுக்கத்தையும் அடக்கியாளுதலும் வேண்டும். அத்தகைய நேர்காட்சியே, மெய்யுணர்வே, அடையத் தகுந்த முடிவாகும். இது தூய நெஞ்சினால் மட்டும் பெறற்குரியது. இது கைகூடுமுன் மனம் முற்றிலும் தூயதாகுமாறு கழுவப்படல் வேண்டும்.

அவ்வாறு மனதைத் தூயதாக்கும்போது தூய நெஞ்சிற்குரிய ஞானநோக்கு என்னும் வலிமையுற்ற ஒரு திறன் மலர்கிறது. இத்திறனின் மூலமே ஞான உண்மைகள் நேரிலே உணரப்படுகின்றன. இறைவன் இயற்கை ஆன்மா இம் மூன்றையும் பற்றிய உண்மைகள் ஒரு தூய நெஞ்சிற்குரிய ஞான நோக்கின் முன்னே திடீரென ஒளிர்கின்றன. இயற்கைக்கு அதீதமானவை என்றோ, அசா

தாரணம் என்றே பெயரிடப் பெறும் எல்லா அனுபவங்களும் இத்திறனல் விளைவன. ஒவ்வொருவரிடத்தும் இந்த ஞான நோக்கு அமைந்திருக்கின்றது; அழுக்குற்ற மனத்திலே அது இருள் மூடிக் கிடக்கின்றது. மனம் தூயதாகும்வரை இத்திறன் பயன்படும் அளவிற்குத் தொழிற் படாதிருப்பதற்குக் காரணமும் இதுவே. அது பிரகாசமடையும்போது அறிவைப் பெறுதற்கு அனைத்தினும் மேம்பட்ட ஒரு வாயிலாக உதவுகிறது. இந்திரியங்கட்கு அப்பாலும் (அதீந்திரியமாயும்) புத்திக்கு அப்பாலும் உள்ள மிக நுண்ணிய மிக உயர்ந்த உண்மைகள் இவ்வாயிலாகவே நமது உணர்விற்கு வருகின்றன.

இத்திறன் அந்த அளவிற்கு வளர்ச்சியடையும்போதுதான் மனிதன் தனது முழு உயரமும் பெற்றவனுவான். அப்போதுதான் அவனை மனித இயல் பெற்றவனென்றும், அவனது காட்சியை இயல்பான காட்சியென்றும் உரைத்தல் வேண்டும். தூய நெஞ்சிற்குரிய ஞான நோக்குத் திறன் வாயிலாகப் பெற்ற மிக நுண்ணிய மிகவுயர்ந்த உண்மைகளைப்பற்றிய அறிவு, முழு வளர்ச்சியெய்திய ஒரு மனிதனது சாதாரண இயல்பான அனுபவத்தையே ஆதாரமாகக் கொண்டுள்ளது. இத்திறனை வளரப் பெருதவர் சாதாரண மனிதர்க்குக் கீழானவர் எனும் பெயர் பெறுதலே சரி. அறிவுள்ள மனிதனேடு ஒப்பிடும்போது நாகரிக வாசனையற்றவன் மனிதப் பிறவிக்குத் தாழ்ந்த ஒரு நிலைக்கு உரியவனுகிறன்; அதுபோன்றே, தூய ஞான நோக்குடைய மனிதனேடு ஒப்பிடும்போது பெரும் அறிவுள்ள மனிதனும் மனிதப் பிறவிக்குத் தாழ்ந்த ஒரு நிலையில் இருப்பவனென்றே நன்குரைக்கலாம்.

எனினும், மிகவுயர்ந்த உண்மைகளை நேரிற் காண உணரும் இத்திறன் வளர்வது, மனம் தூய்மை யடையும்போதே. மதத்தை அனுபவமாக்குவார்க்குரிய ஒரே காரியமாவது, மனம் தூயதாதற்கு உதவி புரிதலே. ஏனெனில் அப்போது மெய்ஞ்ஞானக் காட்சி தானே வரும். இதிலேதான் கிரியைகளும் புராணமும் பயன்படுவனவாம்.

கிரியைகள்

ஆதிமுதல் அந்தம் வரையில் இந்துமதக் கிரியைகள் மனதைத் தூய்மைப் படுத்துதற்கெனவே ஏற்படுத்தப் பட்டுள்ளன. அவற்றுக்கு வேறெரு நோக்கமும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஞான நலனைத் தாராத சில கிரியைகள் உள்ளன என்பது உண்மையே; அவற்றை மாயவித்தைக் குரியவை என்னும் வகுப்பிற் சேர்ப்பது முறையாகலாம். அவை அதர்வ வேத கால முதலே பழக்கத்தில் இருந்து வந்துள்ளன, தந்திர நூல்களும் பிற்காலத்தே அவற்றை விதித்துள்ளன. அக்கிரியைகள் ஒருவனது பகைவனை நசுக்குவதற்கோ, விரும்பிய பொருளொன்றைப் பெறுவதற்கோ, நோய்களைத் தீர்த்தற்கோ, கேடுகள் வராமல் தடுப்பதற்கோ உண்டாக்கப் பட்டுள்ளன. கோரப்படும் முடிவைச் சாஸ்திரங்கள் அனுமதிக்கும்வரை, பிரவிருத்தி மார்க்கத்திற் செல்லும் மக்களாற் பழகப்படும் இக்கிரியைகள் கேடு விளைப்பனவாகா. உதாரணமாக, பகைவன் சமூக நலத்திற்குக் கேடு விளைக்கக் காரணமாயிருப்பதுபற்றி, அந்நலன் கருதி அவனை அழித்தல் அவசியமாகலாம். விரும்பப்படும் பொருள் தகாத ஒன்முக இல்லாதிருக்கலாம். அத்தகைய காரியங்களில் இம் மாய வித்தைகளைப் பழகுதலும் ஒருவனை ஞான நிலையில் தாழ்வுறச் செய்யமாட்டாது. ஆனல் அழுக்குற்ற பலமற்ற மனத்தார் இவற்றைத் தீய வழிகளிற் பயன்படுத்தலும் நேரக்கூடியதே. சுயநயமிக்க கேடுற்ற சில பயன்களைக் குறித்து இக்கிரியைகளை இயற்றும் ஆசைக்கு அவர்கள் எளிதாக வசப்படலாம். ஞான நிலையில் தாழ்வடையும் ஆபத்து இதனிடத்து அடங்கிக் கிடக்கின்றது.

இத்தகைய கிரியைகளை ஒதுக்கிவிடுவோமாயின், மற்றவையாவும் ஞான நலனை அடைதற்கு அனுகூலமானவையேயாம். அவை ஒருவனது மனத்தை அடக்கிப் பண்படுத்த உதவுகின்றன; யாம் முன்னர்க் கூறியுள்ளபடியே இறைவனது மெய்க் காட்சியைப் பெற இது தடுக்க வொண்ணுத ஒரு படியாகும். ஆனல் மனமாசை அறவே கழுவுதற்கு இன்னவாறு கிரியைகள் துணையாவன என்பதை இனிக் காண்பாம்.

எல்லாவித மன மாசுகட்கும் மூல காரணம், நம்மிடத்துள்ள சாரமான பகுதியாகிய தெய்வத்தன்மையை அறியாமையே; என்பதை முன்னெரு அத்தியாயத்திலே யாம் அறிந்துள்ளோம். இந்த அறியாமையைக் குறைக்கும் எதுவும் மனதைத் தூயதாக்க உதவும் என்பது உறுதி. இறைவனைப் பற்றியும் நமது ஆன்மாவின் தெய்வத் தன்மையைப் பற்றியும் செய்யும் சிந்தனை அறியாமையை ஒழித்தற்குப் பயன்படுகின்றது; ஆதலின் அது மனதை நன்கு தூய்மைப் படுத்த ஓர் ஏதுவாகின்றது. ஆயினும் யாதே

னும் ஒரு கருமத்தைப் பற்றிய சிந்தனை பல்லோரது திறமையை மிஞ்சிய ஒரு மிகக்கடினமான தொழிலேயாகும். ஆனால் அக்கருத்தைக் கிரியைகள் மூலமாகத் தூலமாக்கும் போது அனைவர்க்கும் அது போதிய அளவு எளிதாகும்.

இறைவனைக் குறித்தற்காகப் பிரதிமைகளையும் பிரதிகைகளையும் கையாளுதல் முற்கூறியதற்கு ஓர் உதாரணமாகும். பிரதிமையின் (திருவுருவத்தின்) முன்போ ஒரு பிரதிகையின் (குறியின்) முன்போ ஒருவன் வழிபாடு (பூஜை) செய்யும்போதெல்லாம், அவன் பகவானையே நினைத்துக்கொண்டிருக்கிறான் என்பதும், வேறொன்றைப் பற்றியல்ல என்பதும் நிச்சயம். ஒருவன் தன்னுடைய நினைவுகளை இங்ஙனம் (இவ்வாறு) இறைவனை நோக்கித் திருப்பிவிடுதல் சித்த சுத்தியை (மனத் தூய்மையை)த் தருவதற்கு மிகவுயர்ந்த வழியாகும்; ஒரு தூலமான வடிவத்தின் மூலம் இறைவனின் இருப்பை உணர முயல்வது மிக எளிதாகின்றது. அகண்டமாயும் நிராகாரமாயும் (அருவமாயும்) உள்ள ஈசனைப் பற்றிய நினைவில் வெகு நேரம் மனதை நிலை நாட்டுதல் ஓர் அறிவாளிக்கும் மிகச் சிரமமான காரியமாகத்தான் வேண்டும்.

ஒரு திருவுருவத்திற்கு உயிரூட்டுதல் ஆகிய பிராணப் பிரதிஷ்டாக் கிரியையைப் பற்றி முன்னொரு அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ளோம்; ஆன்மாவின் தெய்வத்தன்மையைப் பற்றிய கருத்தைப் படிப்படியாக நம் மனத்தோடு ஒன்றிக்கும்படி செய்யக் கிரியைகள் எவ்வாறு துணைசெய்யும் என்பதை அது தெளிவாகக் காட்டுகிறது. வழிபடுவோன் (பக்தன்) தன் நெஞ்சிலுள்ள ஆன்மாவினின்றும் ஒரு குறிப்பிட்ட சோதிமயமான வடிவோடு இறைவன் வெளி வருவதாக நினைக்க வேண்டும்; தனது மூச்சோடு, அது தனக்கு வெளியே சென்று ஒரு மலர் மூலமாகத் திருவுருவத்திற்கு (விக்கிரகத்திற்கு)க் கொண்டு போகப் படுவதாகவும் நினைக்கவேண்டும். அப்போது திருவுருவம் உயிர்பெற்றதாகக் கூறப்படும். இம்முறை அறிவாற்றல் மட்டும் மிக்கவர்க்கு ஒருவாறு குழந்தைத் தன்மையாகவே தோன்றலாம். ஆயினும் குழந்தைகட்குரிய ஒரு பயிற்சியைப் போன்று அறிவாளிகட்கும் மிக்க பயன் தருவதாகும்; எவ்வாறெனில் அன்னாரிற் பலர் தமது ஞான வளர்ச்சியைப் பற்றியவரை குழந்தைப் பருவத்தினரேயாவர். இம்முறையை மீண்டும் மீண்டும் பழகுவதனாலே தான் ஒருவன் தனது ஆன்மாவின் தெய்வத்தன்மையைப் பற்றிய உணர்ச்சியைப் படிப்படியாகப் பெறுபவனாவான்.

இயற்கையில் இறைவன் எங்கும் இருப்பதை (அந்தர்யாமியாய் உள்ள நிலையை)ப் பற்றிய எண்ணங்களும் கிரியைகளின் துணையால் மனத்தை நன்கு தூய்மைப்படுத்த வல்லனவாகின்றன. அத்தகைய எண்ணங்களால் சிறிது நேரம் வழிபடுவோனது மனம் இந்த உலகத்தின் இழிய தன்மையைக் கடந்து உயர்ந்த நிலைக்குச் செல்கின்றது. இயற்கையிலுள்ள ஒவ்வொன்றும் — அவனுடைய சொந்த உடலும் மனமும் உள்பட —இறைவனை வழிபடுதற்கும் அவனோடு அளவளாவுதற்கும் வேண்டிய இன்றியமையாத முன் உறுப்பாக (பூர்வாங்கமாக)த் தெய்வமயமாக்கப்படுகின்றது. ('தேவோ பூத்வா தேவம் யஜேத்' — இறைவனாகி இறையை வழிபடு.)

இறைவன் தன்னை இயற்கையாக வெளிப்படுத்துகிறான். இது இந்துமதத்திற் போதிக்கப்படும் மிக முக்கியமான ஞான உண்மைகளுள் ஒன்று. ஒருவனது மனம் முற்றும் தூயதாகும் போது, அவன் இதை உணர்கிறான். அவன் இறைவனை எவ்விடத்தும் எப்பொருளிலும் காண்கிறான். ஆனால் அத்தகைய காட்சி கைகூடுமுன், அதைப்பற்றியும் அதிலடங்கிய கருத்துக்களைப் பற்றியும் தீவிரமாகச் சிந்திப்பதின் மூலம் அவன் அந்த உண்மையை உள்ளத்தே தேய்த்துத் தேய்த்து உட்புகுத்துவான் போலப் பேருழைப்போடு அதை உணர முயலவேண்டும். அதைப்பற்றி அவன் நினைக்க நினைக்க, மேலும் மேலும் அவனது உள்ளம் அறியாமையையும் அதனால் விளையும் அழுக்குகளையும் விட்டு நீங்கும். இந்து சமயக்கிரியைகள் அம்மாதிரியான நினைவுகளை எளிதான இனிதான முறையிலே உறுதிப்படுத்தற்கு வேண்டிய சந்தர்ப்பங்களை ஏராளமாக அளிக்கின்றன.

இலக்கங்களையும் (கூட்டல் கழித்தல் முதலிய) சாதாரணக் கணக்குமுறைகளையும் பற்றிய பொதுக்கருத்துக்களை ஒரு குழந்தையின் மனதிற் பதியும்படி அறிவுறுத்துதற்காக ஒரு சில மணிகளை உபயோகிக்கின்றனர்; அது போன்று, இறைவன் இயற்கையில் உறையும் தன்மையாகிய அந்தர்யாமித்துவம் எனும் அதி நுட்பமான கருத்தைப் பண்படாத மனதிற்குட் புகுத்தும் பொருட்டுத் தூலப் பொருள்களை உபயோகித்தலும் பொருத்தமானதேயாகும்.

இதைச் செய்யும் முறையாவது, இயற்கைப் பொருள்களில் ஒன்றைப் பொறுக்கி, அதனைப் புண்ணியம் வாய்ந்ததாகக் கருதுதலே. ஒரு முழுமலைத் தொடரும்—உதாரணமாக, இமயமலையோ விந்தியமோ—புண்ணியஞ் செறிந்ததாகக் கருதப்படல் வேண்டும். கடல் இன்னொரு புண்ணியப் பொருள். அம்மாதிரியே, கங்கை யமுனை கோதாவரி சரஸ்வதி நருமதை சிந்து காவேரி போன்ற பல நதிகளும் புண்ணிய முடையனவே. நதிகளும் மலைகளும் அவற்றிற்கு அதிஷ்டான தேவதைகளின் உடல்களாவன; அத்தேவதைகளை இந்துக்கள் வழிபடுகின்றனர். இத்தேவதைகள் மேம்பட்ட தெய்வாம்சம் பெற்றவர்.

நகரங்களும் ஊர்களும்—காசி, அல்லகாபாத், ஹரித்துவாரம், பிருந்தாவனம், அயோத்யை, துவாரகை, பூரி, உஜ்ஜாயினி, காஞ்சி, இராமேஸ்வரம், கன்னியாகுமரி போன்றவை யாத்திரீகர் செல்வதற்குரிய புண்ணிய க்ஷேத்திரங்களாம் (தூய தலங்களாம்). இவ்விடங்களில் உள்ள காற்றே மெய்ஞ்ஞானம் பெறத் துணை செய்யும். எங்கும் பரந்துள்ள ஈசன் இப்பிரதேசங்களில் மெல்லிய போர்வையால் மறைக்கப்பட்டிருப்பவன் போல் உள்ளான்; ஆதலின் ஒரு சிறிதே நாட்டமுடையோரும் அங்கே இறைவனைக் காணும் நெறி நிற்பார். ஆங்கே சற்றே குறைய வெளிப்படையாயுள்ள தெய்விகப் பிரசன்னத்தினால் (ஒரு சிறிதே மறைபட்டுள்ள தெய்வத்தின் இருப்பினால்) ஒவ்வொருவரும் ஞான ஊக்கச் செறிவைப் பெறுவார். இக்காரணம் பற்றியே இவ்விடங்களிலுள்ள தூளும் தூய்மை வாய்ந்ததெனக் கருதப்படுவதுண்டு.

இன்னும், சில மரங்களும் செடிகளும் புல்லும் வனமும் மலர்களும் இலைகளும் உலோகங்களும் கற்களும் பிறவும் தூயனவாக எண்ணப்படுகின்றன. இதுவே அனைத்தும் என்பதில்லை. பூஜை (வழிபாடு) நிகழும்போது, தேவி துர்க்கையைத் தூய்மை வாய்ந்தனவாகக் கருதப்படும் பற்பல இடங்களினின்றும் கொணரும் நீரைக் கொண்டோ, தூய்மை வாய்ந்தனவாகக் கருதப்படும் பற்பல பொருள்களோடு கலந்த நீரைக் கொண்டோ அபிஷேகம் (நீராட்டம்) செய்ய வேண்டும். இவற்றிற்குள்ளெல்லாம் அடங்கிய கருத்து யாதெனின், உலகத்தில் எந்த மூலையிலுள்ள பொருளும் வழிபடுவோனது காட்சிக்குத் தென்படும் தூய்மை மண்டலத்திற்குள் இடம் பெறல் வேண்டும் என்பதே. உண்மையை உரைப்போமாயின், உலகத்தில் எதுவும் தூய்மையற்றதாகாது. பூமியும் சூரியனும் சந்திரனும் கிரகங்களும் நக்ஷத்திரங்களும் அவ்வவற்றிற்குள்ள அதிஷ்டான தேவதைகளின் (அந்தந்தப் பொருள்களை இருப்பிடமாகக் கொண்டுள்ள தெய்வங்களின்) தூல உடல்களாதலின், அவற்றைச் தூய பொருள்களாகக் கருத வேண்டுமெனச் சில கிரியைகள் வற்புறுத்துகின்றன. இயற்கையிலுள்ள ஒவ்வொன்றையும் தூய பொருளாகக் கருதக் கிரியைகள் நமக்குத் துணை புரிகின்றன என்னலே உண்மையாம். எங்கும் தூய்மை பரந்துள்ளது (தெய்வத் தன்மை மறைந் தொளிர்கின்றது) என்னும் இக்கருத்து ஒருவனது மனதைப் புனிதமாக்கி, மனத்திலுள்ள தீய சார்புகளையெல்லாம் வெளியேற்றி, இயற்கையில் இறைவன் எங்கணும் எழுந்தருளியிருக்கும் (அந்தர்யாமி) நிலையினை உணர்தற்கேற்ற தகுதியைப் படிப்படியாக வருவிக்கும் பான்மையதாகும்.

இது சம்பந்தமாக, இலிங்கம் என்னும் குறி (பிரதிகை) வாயிலாக இறைவனைச் சிவபெருமானாக வழிபடுதலைப் பற்றி ஒரு மொழி கூறல் பொருத்தமற்றதாகாது. தற்கால மனப்பான்மையர் சிலர், இலிங்க வழிபாடு நாகரிகமற்றவர்க்குள் வழங்கிவந்த, சனன உறுப்பை (ஆண்குறியை) வழிபடும் கிரியையின் மிச்சமேயென்று கொண்டு அதனை இழிவாக உரைப்பர். கிறிஸ்தவர்க்குள் வழங்கிவரும் 'தூய விருந்துக் கிரியை' (இறைவனது உடலாகப் பாவித்துத் தூய்மையாக்கப்பட்ட சில பொருள்களைப் பிரசாதமாக உண்ணல்) மனிதனை மனிதன் உண்ணும் வழக்கத்தினை ஆதியாகக் கொண்டெழுந்ததாகலாம் என்பது போல, இதுவும் ஆரம்பத்தில் சனன உறுப்பின் வழிபாட்டைப்பற்றிய கிரியையாக இருந்திருக்கலாம். அதைச் சிறிதும் பொருட்படுத்த வேண்டியதில்லை. ஏனெனில், பழைய கிரியைக்கு வெகு தொலையிலுள்ள ஒன்றாக அது உருமாறி உயர்வடைந்துள்ளது. சனன உறுப்பைப் பற்றிய கருத்து முற்றிலும் அதனின்றும் விலகிவிட்டது. சிவபெருமான் வடிவமாயுள்ள இறைவனுக்குத் தூய அறிகுறியாகச் சிவலிங்கம் இப்போது உள்ளது; இலிங்கம் என்பதன் முக்கியமான பொருள் அறிகுறியென்பதே. அதன் வாயிலாக ஒருவன் இறைவனையே வழிபடுகிறான், இறைவனையே நினைக்கிறான், வேறொன்றையும் அன்று. இறைவனைப்பற்றிய அத்தகைய தியானம் ஒருவனது உள்ளத்தைத் தூய்மைப்படுத்த உதவுகிறது என்பது உறுதி.

இயற்கையில் இறைவன் அந்தர்யாமியாக எழுந்தருளியிருத்தலைப்பற்றிய நிச்சய புத்தியின் பலத்தைக் கொண்டு, துணிவுள்ள இந்துக்கள் ஞானநெறியில் வெகுதொலை முன் செல்லக்கூடும் என்பதை இது காட்டுகிறது. சனன உறுப்பென்னும் கருத்தை உண்மையாகக் கொண்டாலும், அதை அவர்கள் தெய்வ மயமாக்கி, ஞானவளர்ச்சிக்குரிய ஒரு துணையாக மாற்றிவிட்டார்கள். [இன்னொரு விளக்கத்திற்கு, சுவாமி விவேகாநந்தர் நூல்களின் முழுத் தொகுதி—4-ம் தொகுதி பக்கம் 357-58 ஐப் பார்க்கவும்.]

இறைவனைப்பற்றிய சிந்தனை, இறைவனது அந்தர்யாமி நிலை, ஆன்மாவின் தெய்வத் தன்மை—இம்மூன்றும் தவிர, வழிபடுவோனது சொந்த உடலும் மனமும், அவனைச் சுற்றியுள்ள ஒவ்வொன்றும் தூய்மை வாய்ந்தன என்ற கருத்துக்களும், இந்துமதக் கிரியைகள் யாவற்றிலும் மனநூல் சம்பந்தமான ஆதாரம் ஆகின்றன. தூய்மையைப் பற்றிய இத்தகைய கருத்துக்கள் தாற்காலிகமாக அழுக்குற்ற எண்ணங்களையும் தூண்டுதல்களையும் தடுத்து, மனதை இறைவனோடு அளவளாவும் நிலைக்குக் கொண்டு வருகின்றன. வழிபடுவோன் பூஜையை நேராகத் தொடங்குமுன் இந்த நிலையை ஏற்படுத்த வேண்டியதாகின்றது. ஆரம்ப முதல் செய்யப்படும் ஒவ்வொன்றும் மனதை அத்தகைய உயர்ந்த நிலைக்கு ஏற்றுதற்கெனப் பூர்வாங்கமாக விதிக்கப்பட்டுள்ள ஆத்ம சுத்தி முறையே யாகும்.

(தொடரும்)

"வானப்பிரஸ்தர்"

டி. ஆர். ராமதாத சாஸ்திரி. B. O. L.

[கல்யாணிலிருந்து மொழிபெயர்த்தது.]

(1)

முனிவர் வசிப்பதற்கே அமைந்ததோ என்று கருதுமாறு இருந்தது அவ்விடம். உயர்ந்த மலைச்சாரல்கள் நான்கு புறங்களிலும் சூழ்ந்திருந்தன. அச்சிறு குடில் நன்கு மெழுகிக் குப்பைகளின்றித் தூய்மை பெற்று விளங்கிற்று. மாவிலைத் தோரணங்களும் வாழைமரங்களும் வாயிலின் அழகை மேன்மைபெறச் செய்தன. மையத்தில் ஓர் ஹோம குண்டம் இருந்தது. அதினின்று இரவும் பகலும் இடைவிடாது கிளம்பி வானிற் பரவிய புகை நன் மணத்தை எங்கும் நிரப்பிக் கொண்டிருந்தது. குண்டத்தின் அருகில் ஹோமம் செய்யப் பயன்படும் பாத்திரங்களும் அரசு புரசுக் குச்சிகளும் ஒழுங்காக வைக்கப்பட்டிருந்தன. தர்ப்பைப் புற்கள் கட்டி வைக்கப்பட்டிருந்தன. புல்லாசனம் ஒன்றும் அங்கிருந்தது.

அருகிற் பெருகிய மலையருவியின் இன்னோசையும், அச்சமின்றிப் படுத்து அசைபோடும் மான்களின் சத்தமும், முயல், மயில் முதலிய ஜந்துக்களின் ஒலியும் செவிகட் கின்பமளித்தன. வானினின்றிறங்கிய காமதேனுவோ என ஐயத்தை விளைவிக்கும் பசுவும் அதன் கன்றும் ஆசிரமத்திற்குச் சோபையையளித்தன. தலைவரிடம் அதிகமான அன்பு வைத்திருந்த அது எங்கும் செல்லாதென்று எண்ணிய தலைவர் அதைக் கட்டும் வழக்கத்தையே ஒழித்துவிட்டார்.

இவ்வளவு ஏற்பாடுகளுடன் ஆசிரமத்தை அழகாக வைத்திருப்பவர் ஆசிரமத் தலைவரான ஓர் முனிவர்தான். அவருடைய சிரத்தின் கேசங்களும், முகத்தின் மீசைதாடிகளும் பாதி நரைத்திருந்தன. உடல் இளைத்து மெலிந்திருந்தது. மார்பின் எலும்புகளை எளிதில் எண்ணிவிடலாம். நரம்புகள் வீங்கியவைகளாகத் தோன்றின. இடுப்பில் தர்ப்பைப் புற்களாலான ஓர் கயிற்றில் வாழைச் சருகுகளினலான ஓர் கௌபீனம் மட்டும் ஆடையாக விளங்கிற்று. நள்ளிரவிற் கூட அவர் ஆசிரமத்து மரத்தினடியில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் வீற்றிருப்பதை எவரும் காணலாம். மழை நாட்களில் காற்றடித்து மழை பொழிகையில் திறந்த வெளியிலேயே அவர் அமர்ந்திருப்பார். குளிர்காலத்தில் இரவு முழுதும் கழுத்தளவுள்ள நீரில் நின்று கொண்டிருப்பார். கோடை நாட்களில் நாற்புறங்களிலும் தீயை வளர்த்து நடுவில் அமர்ந்து கதிரவனை நோக்கியவாறு இருப்பார்.

பனி நாட்களில் சடைகளிற் படிந்துள்ள பனியை நீக்கவோ, வெப்ப நாட்களில் முகத்தினின்றும் பெருகும் வியர்வை நீரைத் துடைக்கவோ அவர் முயன்றதே இல்லை.

இடைவிடாது காற்று வீசி, மரங்கள் சாய்ந்து, மின்னல் ஒளிர்ந்து, கடும் மழை பெய்கையிலும் அவர் உணர்வற்றவராகவே காணப்படுவார்.

காலை, நடுப்பகல், மாலை நேரங்களிலும், மும்மூர்த்திகளின் மூலமந்திரமான 'காயத்ரீ' மந்திரத்தை அடக்கத்துடனும், உறுதியுடனும், பற்றுடனும் ஜபம் செய்துகொண்டிருப்பார்.

தென்றலும் புயலும் அவருக்கு ஒன்றே தான். உழாத பூமியில் தானிய விதைகளை வீசுவார். மான்கள், முயல்கள், மாடுகள், பன்றிகள் மேய்ந்து புசித்து மிகுந்ததுதான் முனிவருக்குக் கிடைக்கும். பறவைகளும் வயிறு நிறையத் தின்னும். பிறகு அறுவடை செய்து ஆசிரமத்தின் ஒரு மூலையில் குவிக்கப் பட்டுள்ள அந்த தானியத்தைக் குருவிகளும், அணில்களும், எலிகளும் யாதொரு தடையுமின்றித் தின்னும். 'தனக்குள்ள உரிமை அவற்றிற்கு முண்டெ'ன்பது முனிவரின் எண்ணம். புதிய தானியம் வந்ததும் பழைய தானியத்தின மிகுதியை ஆற்றின் கரையில் கொட்டுவார். புதியதிலும் ஆறில் ஓர் பகுதியை அரசனுக்குரியது என்று பொதுவான இடத்தில் போட்டுவிடுவார்.

உணவின் தேவை அவருக்கு மிகக் குறைவானது. ஏகாதசி, பிரதோஷம், சிவராத்திரி அமாவாஸ்யை, பூர்ணிமை என்று விரத நாட்கள் வந்துகொண்டேயிருக்கும். இவற்றைத் தவிர 'சாந்திராயணம்' முதலிய தொடர்ச்சியான உபவாஸ விரதங்களும் இருக்கும். சாப்பிடும் நாட்களிலும் ஒரே தடவை தான் உணவு உண்டு.

ஆசிரமம் ஹோமத்திற்காக மட்டும் ஏற்பட்டது. அது அக்கினி தேவருடையது, அங்குச் சமையல் செய்யக்கூடாது. வெளியில் தான் செய்யவேண்டும். ஆதலால் கோடையில்தான் சமையல் செய்துகொள்ளமுடியும். காற்றுள்ள நாட்களில் விறகு எரியாது. அன்று பாறைகளில் தானியங்களை அரைத்து மாவாக்கிக் கரைத்துக் குடிப்பார். மழை நாட்களில் அதுவும் முடியாது. அப்போது பச்சை தானியங்களையே உட்கொள்வார். பற்கள் உறுதி பெற்றவை. ஆதலால் அவர் கவலைகொள்ளாது தானியங்களைப் புசிப்பார்.

அளவுகடந்த மழையாலோ, மழையின்மையினலோ, தானியங்கள் விளையாது போனல், பழங்களைத் தின்பார். அவையுமில்லையெனில் இலைகள் ; இலைகள் உதிர்ந்தால் கிழங்குகள் அவருடைய பசிநோயை நீக்கும்.

சிறு பறவைகள் சில நேரங்களில் மலத்தை யிட்டுவிடும். அவர் கால்கள் எப்பொழுதாவது தூய்மையற்ற இடத்தை மிதித்துமிடும். அப்போதெல்லாம் சிறிதும் சினமின்றி நான்காம் முறையும் நீராடுவார்.

குளித்த பிறகுதான் ஆசிரமத்திற்குள் நுழைவார். ஆசிரமத்திற்குக் கதவு கிடையாது. திறந்த ஆசிரமத்தில் பறவைகளும் விலங்குகளும் தடையின்றி நுழையும். அவற்ருல் ஆசிரமம் தூய்மையை இழக்குமே என்று பிறர் எண்ணக் கூடும். ஆனல் முனிவருடைய எண்ணம் வேறு.

'தூய்மை என்பது ஒரு விரதம். அது தன்னை மட்டும் பற்றியதே யன்றிப் பிறரைப் பற்றியதன்று. எலும்பு, உதிரம், மாம்ஸம் முதலியவை நிறைந்துள்ள உடலிற்குத் தூய்மை எவ்விதம் ஏற்படும். எல்லாப் பற்றுக்களையும் சேர்க்கைகளையும் ஒழிப்பதன் மூலம் உள்ளத்தைச் சீர்படுத்துவதே தூய்மையின் சிறந்த நோக்கமாகும்' என்பது அவருடைய சித்தாந்தம். ஆதலால் எல்லாப பொருள்களையும் நீரிற் கழுவிப் பிறகே அவர் பயன்படுத்துவார்.

விரதங்களை இடைவிடாது ஏற்றுப் பழகுபவர் இளைத்துப்போவது இயற்கை விதியாகும். துன்பங்களைப் பொறுத்துக்கொள்வதற்கும் ஒரு எல்லையுண்டல்லவா? ஆயினும் முனிவர் விஷயத்தில் இவ்விதி மாறுபட்டிருந்தது. உடல் இளைத்திருந்தும் உண்மைப் பற்றைப் பெற்ற முனிவர் வலிமை குன்ருது விளங்கினர்.

வேதங்களிற் கூறிய வண்ணம் நாள்தவருது தேவர்கட்கும், பிதிர்கட்கும், முனிகட்கும், விருந்தினர்கட்கும், பறவை, பூச்சி முதலிய ஜீவன்கட்கும், தக்கபடி பூஜை செய்து வந்தார். (ஐந்து யக்ஞங்கள்).

பூஜைக்குப் பயன்படும் மலர்கள், இலைகள் தர்ப்பைகள் முதலியவை, தூய்மை பெற்றும் பூச்சி புழுக்களாற் கெடாமலும் இருக்கும். அளவிற்குமேல் தேவைக்குமேல் ஓர் மலரைக் கூடச் செடியிலிருந்து கொய்யமாட்டார். எல்லாச் செயல்களும் குறிப்பிட்ட நேரங்களில் ஒழுங்காக நடைபெற்றன.

மந்திரங்களைத் தெளிவாகவும், முறையாகவும், நிதானமாகவும் ஓதுவார். ஹோமப் பொருள்களைத் தீயில் இடும்பொழுது ஓர் பகுதி கூடத் தவறித் தீயிற்கு வெளியில் விழாது. ஆசிரமத்தின் பசு குறிப்பிட்ட

நேரத்தில் பூஜையைப் பெறும். தரையில் விழும் சாணம் உடனே அகற்றப்பட்டு விடும். கன்றோ, பசுவோ அதை உடலிற் பூசிக் கொள்ள நேரம் அளிக்கப்படாது.

முனிவரின் இயற்கையறிவு மிகவும் உயர்ந்தது. 'குறிப்பிட்ட பறவைகள் பறக்கின்றன. மழை வரும்' என்பார்; மழை தவறாது பெய்யும். குறிப்பிட்ட நக்ஷத்திரம் கூடிய நாளில் விதைக்க வேண்டும், அறுவடை செய்ய வேண்டும், என்றெல்லாம் அவருக்கு நன்கு தெரியும். கவன மின்மை, ஏமாற்ற மடைதல், நேரந்தவறுதல், சோம்பல் முதலிய தீய பழக்கங்கள் அவரிடம் கிடையா.

கவனம் (பற்று) அவருடைய தனிச் சிறப்பாக விருந்தது. பனி நாட்களில் மல்லி மலர்களால் அழகிய மாலையைத் தொடுத்து அக்கினி தேவருக்கு அளித்துப் பூஜை செய்வார் முனிவர். கோடையில் கருமை நிறங் கொண்ட ஆம்பல் மலர் மாலை அளிக்கப்படும். அம்மாலைகள் உயர்ந்த வேலைப்பாடுகள் பெற்றிருக்கும்.

காலை 4-30 மணிக்குத் துயிலை நீக்கி எழுந்து குளித்து தியானத்தில் ஆழ்ந்திருப்பார். பிறகு கதிரவனுக்கு நீரை யளித்தல் என்னும் வழிபாடு நடைபெறும். ஹோமம் பிறகு நடைபெறும். மும்முறை தவறாது நீராடுவார்.

எப்பொழுதாகிலும் விருந்தினரும் வருவர். மரத்தின் அடியில் உள்ள வேதிகையில் (மேடையில்) அவர்களை அமரச் செய்து, கிழங்கு, வேர், பழம், பால், தேன், நீவார தானியம் முதலியவற்றாலான உணவை அளிப்பார். அக்னி தேவருக்கும் விருந்தினருக்குப் போலவே உணவு தினமும் உண்டு. முனிவர் கைபட்ட அளவிலேயே வேப்பிலையும் அமிருதமாக மாறும், என்பது விருந்தினரின் உறுதி.

ஒருநாள் புதிய விருந்தினர் ஆசிரமத்திற்கு வந்தார். வாலிபப் பருவம், ஒளி ததும்பும் முகம், சிவந்த மேனி, மெலிந்த தோற்றம், இடுப்பில் தர்ப்பைப் புற்கயிறு, தோளிற் பூணூல், மரவுரி ஆடை. தேவரொருவர்தான் அத்தோற்றத்தில் வந்துள்ளார் என எளிதிற் கூறலாம். முனிவர் விருந்தினரை வரவேற்றார், வணங்கினார், கால்களைக் கழுவினார்; ஆஸனம் அளித்தார்; பிறகு பணிவுடன் அருகில் அமர்ந்தார்.

விருந்தினர்: உம் ஆசிரமத்து மான் அழகாக உளது.

முனிவர்: (பணிவும் கம்பீரத் தன்மையும் பெற்ற குரலில்) எம்பெருமான் படைத்த உலகில் எல்லாம் அழகியதே. நாம் அறியாது சிலவற்றை அழகற்றவை யெனக் கருதுகிறோம்.

விரு: தங்கட்குக் கஸ்தூரி மான் தோலொன்றைப் பரிசாக அளிக்க விரும்புகிறேன். ஏற்கவேண்டும்.

முனி: நன்றி பாராட்டுகிறேன். யாகம் செய்கையில் மான் தோலினாலான ஆஸனம் வேண்டும். அஃதொன்று என்னிடம் உளது. மிகுதி நேரங்களில் தர்ப்பைப் புற்களே ஆஸனமாகப் பயன்படுகின்றன.

விரு: ஆசிரமத்தில் உள்ள அழகிய மலர்களின் பெருமை உமக்கு விளங்கவில்லை போலும். உம சடைகளில் ஓர் மலரையும் காணேம். ஓர் மலரைச் சூட்ட அனுமதி வேண்டுகிறேன்.

முனி: வாயு தேவர் மலர்களின் நறுமணத்தை எல்லோருக்கும் ஒரேமாதிரிப் பகிர்ந்து கொடுக்கிறார். அதுவே போதும். அக்கினி தேவருக்கு அளிப்பது நம் கடமை. இம் மண்ணுடலுக்கு இது எதற்கு?

விரு: அக்கினி தேவருக்கு வேண்டிய மலர்கள் எப்பொழுதும் கிட்டுமா?

முனி: கிடைக்கும். கிடைக்காவிடினும் தவறில்லை. உள்ளத்தின் ஈடுபடுதல்தான் தேவர்கட்கு வேண்டும். பொருள்கள் அறிகுறிகள் தான்.

விரு: மலையருவியின் அக்கரையில் அழகிய காடு இருக்கிறது. அங்கு மலர்களும் கனிகளும் வேண்டுமளவிற் கிட்டும். அங்கு தாம் ஆசிரமத்தை அமைத்துக் கொள்ளலாம் என்று எனக்கு அவா ஏற்பட்டுளது. நான் உதவி புரிகிறேன்.

முனி: இங்கும், தானியங்கள் விளைகின்றன. மலர்களும் கனிகளும் வேண்டுமளவில் கிடைக்கின்றன. நான் ஒருவன் இதைக் கொண்டு வாழ்க்கையை நடத்தலாம். அது உயர்ந்ததெனக் கருதத் தொடங்கினால் ஒன்றைக் காட்டிலும் மற்றொன்று உயர்ந்ததாகத் தோற்றமளித்துக் கொண்டே யிருக்கும். அமைதி என்பது ஏற்படா தொழியும்.

விரு: என்னை யாரென்பது அறிந்து கொள்ளவில்லையா? (புன் முறுவல் புரிகின்றார்).

முனி: ஏன்! நன்ருய் அறிவேன். எல்லா விருந்தினரும் கடவுளின் அம்சம் பெற்றவர் எனத் தெரியும். அது போதும்.

விரு: உம் தவத்தால் மகிழ்ந்த இந்திரன் உம் எதிரில் நிற்கிருன். ஸ்வர்க்க உலகின் எல்லா இன்பங்களும் உம் அடிகளிற் கிடக்கின்றன. (என்று சொல்லும்போதே ஏழு நிறங்கொண்ட வில்லைக் கையிலேந்தியும், அழகிய ஆடையை உடுத்தியும், உள்ள இந்திரன் எதிரில் தோன்றினன். மாதலியைப் பாகனைக் கொண்ட அழகிய தேரும் அருகில் நின்றது. கைகூப்பிய வண்ணம் தேவர்கள் துதி செய்து நின்றனர். எங்கும் தேவ மலர்களின் நறுமணம் வீசியது. தன் தேரில் ஏறிக்கொள்ளுமாறு இந்திரன் கைகளால் சைகை செய்தான்).

முனி: தம் திருவடிகள் என் ஆசிரமத்திற் பட்டமையினுல் மகிழ்கிறேன். (தரையில் விழுந்து வணங்குகிருர்) என் தவங்களின் பயன் கிடைத்ததற்கு நன்றி. எம்பெருமானின் மகிழ்ச்சியைப் பெறவே தவம் புரிகிறேன். என்னுடைய இந்த அற்பமான உடலின் சேர்க்கையினுல், தூய்மை பெற்ற ஸ்வர்க்கலோகம் தூய்மை யிழக்குமாறு செய்ய நான் ஒருகாலும் அனுமதியேன்? முற்பிறவிகளின் பயனைக் கிடைத்துள்ள இச் சடலம் உள்ளவரை இங்கிருந்துகொண்டே அக்கினி தேவருக்குப் பூஜை செய்ய விரும்புகிறேன்.

(அவர் உடலுடன் ஸ்வர்க்கத்திற்கு வர மறுத்ததை யறிந்த இந்திரனுக்கு வியப்பேற்படவில்லை.)

இந்: யாரிடம் இவ்விதம் இகழ்ச்சி மனப்பான்மையுடன் பேசுகிறீர் என்பது தெரியுமா? (ஒலி சிறிது கடுமையாக மாறுகிறது).

(உடனே தடியையும் கயிற்றையும் கைகளிலேந்திய கரு நிறங்கொண்ட யமதர்மன் இந்திரனின் அருகில் நின்ருன்).

முனி: (அச்சமில்லாத பணிவுடன்) நான் தேவர் தலைவனை இகழக் கருதவில்லை. ஆனுல் என் முறையை மாற்ற விரும்பவுமில்லை. ஸ்வர்க்க லோகத்தின் பெருமை எனக்கு நன்ருய்த் தெரியும். அங்குள்ளவரும் உள்ளத்தின் இன்பத்தையே விரும்புகின்றனர். அந்த இன்பம் எனக்கும் இங்கு கிடைக்கிறது. நரகத்திற்குப் போக நேரிட்டாலும் அந்த இன்பம் எனக்குக் கிடைக்கும். ஓம் என்னும் மந்திரத்தின் ஒலிவடிவத்தில் விளங்கும் எம்பெருமானையும், வேதங்களின் அன்னையாக உள்ள காயத்திரி தேவியையும் அங்கும் எளிதில் ஸேவிக்க முடியும். நன்கு ஆராய்ந்து பார்த்தால் ஸ்வர்க்கலோகத்தை விட நரகத்தில்தான் தவம் செய்வதற்கு அதிகமான வஸதிகள் உண்டு. யமதர்மராஜர் விரும்பினுல் அங்கு செல்லவும் நான் மறுக்கமாட்டேன்.

தர்ம: நான் தம் திருவடிகளிற் பணிந்து அருள் பெற்றுச் செல்லவே இங்கு வந்திருக்கிறேன்.

(என்று கூறித் தலைவணங்கிய வண்ணம் யமதர்மன் மறைந்தான். முனிவரின் விருப்பமின்றி அவரைத் தொடவும் அவனுக்கு வலிவேது? நரகங்களின் சூழ்நிலையைத் தன் தவத்திற் கேற்றவாறு செய்துகொள்ளும் திறமை பெற்ற முனிவர் நரகத்திற்கு வந்துவிடின், நரக வாசிகளின் தீய வினைகள் எரிந்து சாம்பலாகித் தன் நரகங்கள் தவ உலகமாக மாறிவிடும் என்பதை யமதர்மன் நன்கு அறிவான்).

இந்: நீர் பூஜை செய்துவரும் அக்கினி தேவரே உமக்குத் தக்க தண்டனை யளிப்பார். விரைவில் அறிவீர்.

(என்று சொல்லிய வண்ணம் ஏமாற்றத்தால் உள்ளம் சிதைந்த இந்திரன் மறைந்தான்.)

* * * *

(2)

முனிவர் எவ்விதப் பதட்டமும் வாட்டமும் இல்லாது அமைதியின் வடிவமாக அமர்ந்திருந்தார். பறவைகள் பேரிரைச்சலுடன் வானிற் கிளம்பிப் பறக்கலாயின. விலங்குகள் பரபரப்புடன் இங்குமங்கும் ஓடத்தொடங்கின. வானில் புகை வட்டவடிவிற் பரவியது.

'அம்மா!' எனப் பசு கதறியது. முனிவர் இரு செவிகளை உயர்த்திக் கன்றையே நோக்கிக்கொண்டு நின்ற பசுவைப் பார்த்தார். 'காக்க வேண்டும்' என்ற வேண்டுகோள் அதன் விழிகளில் தோன்றியது. 'முனிவர் பார்த்துவிட்டார்' என்பதை அறிந்த பசுவும் கன்றும் வாலைத் தூக்கிக்கொண்டு இங்குமங்கும் ஓடின. முறையே காற்று சூடாக வீசலாயிற்று. வானிற் சிவப்புத் தீக்கொழுந்துகளும் தென்பட்டன.

முனிவர் ஹோம குண்டத்தின் முன்பு நின்ருர். கைகளைக் கூப்பி வணங்கிப் பிறகு ஆஸனத்தில் உறுதிப்பான்மையுடன் அமர்ந்தார். 'தேவரே! நான் இவ்வளவு நாட்க

ளாகப் பல உயர்ந்த ஹோமப் பொருள்களை அளித்துப் பூஜை புரிந்தேன். இன்று இந்த என் உடலையே தமக்கு ஹோமப் பொருளாக அளிக்கப்போகிறேன். அன்புடன் ஏற்க வேண்டுகிறேன்'

என்று சொல்லியவாறு கண்களை மூடிக் கொண்டார். மரங்களில் தீப்பரவியமையி னால் ஒலி அதிகமாகியது. முனிவரின் ஆசிர மத்தின் முக்கிய மரமும் சாம்பலாயிற்று. கிளைகள் ஒடிந்து விழுந்தன. அக்கருமை யான ஒலியோ, தீயின் வெப்பமோ முனிவ ரின் தியானத்தைக் கலக்க முடியவில்லை. அக்கினி தேவர் அம்முனிவரின் அருகிற்கூட நெருங்கவில்லை.

மாலைநேரம் வந்ததும் சந்தி பூஜையைச் செய்வதற்காக விழிகள் தாமாகத் திறந்தன. சுற்றிலும் புகை நிறைந்திருந்தது. தணல்க ளும் சாம்பல்களும் கண்கட் கெட்டியவரை யில் தரையிலிருந்தன. ஒருவாறு அருவிக்கு வழியைச் செய்துகொண்டு சென்றார். மறு நாள் ஹோமத்திற்கு வேண்டிய ஸமித்து (குச்சி)க்களைத் தேடி எடுத்துக்கொண்டார். திரும்பி ஹோமத் தீயை அணையாது பாது காத்துக்கொண்டார்.

மறுநாட் காலையில் முனிவரைத் தேடிக் கொண்டு பல வேடர்கள் வந்தனர்.

'ஐயா' இங்கிருந்து ஓர் காதத் தொலைவில் ஒரு காடு உளது. அதுமட்டும் நேற்றைய தீயில் அகப்படாது தப்பிக் கொண்டது. அங்கு உமக்கு வேண்டிய எல்லா உதவிப் பொருள்களும் கிடைக்கும். உம் பசுவும் எங்கோ ஓடித் தப்பிக் கொண்டது. நீங்கள் தயவுசெய்து அங்கு வரவேண்டும். எங்களா லாகும் உதவிகள் எப்பொழுதும் கிட்டும் என்று வேண்டினர்.

'நான் இன்று முதல் 'தப்தகிருச்சிரம்' என்ற விரதத்தை ஏற்கப் போகிறேன். எம் பெருமான் அவ்விரதத்திற்கு வேண்டிய உத வியை இப்பொழுதுதான் அளித்திருக்கிறார். அக்கினி தேவரின் உதவியினால் தரையி லுள்ள கிழங்குகள் நன்றாகப் பக்குவமாயி ருக்கின்றன. தீயிற் படாது காய்ந்து போன குச்சிகள் சிலவும் இங்கு உள. காட்டுத் தீ எரிந்த காட்டில் கட்டாயம் நல்ல மழை பெய்யும். முன்பிருந்ததைவிட அதிகமான செழிப்பு ஏற்பட்டுவிடும். இதற்கிடையில் என்னுடைய—உண்ணாமல் நிறைவேற்றக் கூடிய இந்த விரதமும் முடிவு பெற்றுவிடும். பிறகு எம்பெருமான் அளிக்கும் உணவை மகிழ்வுடன் ஏற்பேன்.' என்று அன்பொழுக முனிவர் விடையளித்தார். முனிவரின் உள் ளத்தில் ஒரு பொருள் கிடைக்கவில்லை என்ற எண்ணமே ஏற்படவில்லை. உள்ளதைக் கொண்டு மகிழ்ச்சி பெறும் அவர் புதிய இடத்திற்கு ஏன் செல்ல வேண்டும்?

'அங்ஙனமாகில் நாங்கள் இங்கிருந்து கொண்டு தமக்கு வேண்டிய பால், பழம், தர்ப்பை, மலர், முதலியவற்றைக் கொண்டு வந்து உமக்குப் பணி செய்யவாவது அருள் புரிய வேண்டும்!' என்று அவ்வேடுவர்கள் கூறினர்.

'பூஜைக்கு வேண்டிய உதவிப் பொருள் களை (தர்ப்பைப்புல், மலர்) பிறர் கொடுக்க யான் பெறுவது என் வழக்கமல்ல. அவற்றை நானே கொண்டுவர வேண்டியதுதான் முறை. உபவாஸ விரதத்தை ஏற்கப் போகிற எனக்குப் பழங்களும் பாலும் தேவையில்லை. எவராவது விருந்தினர் வந்தால் உங்களிடம் வந்து வேண்டியவற்றைப் பெற்றுக் கொள் ளத் தயங்கமாட்டேன்' என்று அன்புடன் முனிவர் விடையளித்தார்.

நடுப்பகல் நேரம் ஆகிவிட்டபடியால் முனி வரின் நியமங்களுக்கு இடையூறு விளைவிக்கக் கூடாதென எண்ணிய வேடர்கள் விடை பெற்றுத் திரும்பினர்.

(தொடரும்)

ஆசிரியர்க்குரிய ஐம்பெருந் தேவைகள்

(அமெரிக்காவில் ஒரு பேராசிரியர் கூறியது)

(1) ஆண்டுகள் பல கழியினும் குறையாது நீடிக்கும் ஊக்கம் வேண்டும்; அதனால் உள்ளத்தி லும் ஒழுக்கத்திலும் என்றைக்கும் இளமை திகழ வேண்டும்.

(2) தமது தொழிலில் ஆனந்தம் பெற வேண் டும். புதிய கொள்கைகளையும் செயல் முறைகளை யும் சோதிப்பதில் உணர்ச்சி பெருக வேண்டும்; பயன்தரத்தக்க கல்வி சம்பந்தமான முயற்சிகளில் சித்தியடைவதினால் வரும் மனத்திருப்தி வேண்டும்; தம்மிடம் ஒப்பிக்கப்பட்ட குழந்தைகள் வளர்ச்சி யடைவதைக் காணும்போது முழு நெஞ்சத்தும் பொங்கும் ஆனந்தம் வேண்டும்.

(3) குழந்தைகளின் மீது அன்பு வேண்டும்; ஏனெனில் அத்தகைய அன்பு இல்லாத போது போதித்தல் ஓர் அக்கிரமமாகும். அன்பு இருக்கு

மாயின் எவ்வித முக்கிய கல்வி சம்பந்தமான வேலையும் பாரமாகாது.

(4) மெய்யாகவே ஆசிரியத் தொழிலுக்குரிய மனப்பான்மை வேண்டும், தமது போதிக்கும் முறையை விருத்தியடையச் செய்யும் ஆசை வேண்டும்; தம்மை முன்னினும் மேம்படுத்திக் கொள்ளும் மன உறுதி ஓங்க வேண்டும்; துணையாசிரியரோடும் பெற்றோரோடும் மாணவரோடும் ஒத்துழைக்கும் இயல்பு வேண்டும்; தமது துணையாசிரியரிடத்தும், தமது பள்ளிக கூடத்தும், தமது பள்ளிக் கூட முறையிலும் உள்ள மிகச்சிறந்த அம்சத்தைக் காணவும் ஆதரிக்கவும் அவசியமான கூரிய உள் நோக்கும் ஆசையும் வேண்டும்.

(5) இலக்ஷியத்திற்காகத் துடிப்பும், இலக்ஷியத்தை அடைவதற்காகப் பாடுபடும் போது ஏற்படும் பற்பல தோல்விகளையும் பொறுத்துக் கொள்ளும் தைரியமும் வேண்டும். இலக்ஷியங்கள் வெகு தொலையிலுள்ளன என்பதையும், அறுதியான நிலையினை அடையும் வழியிலுள்ள மைல் கற்களையே தாம் சேர்கின்றனர் என்பதையும் உணரும் அனுபவ புத்தி வேண்டும். போதிப்பதில் ஏற்படும் ஆனந்தக் கிளர்ச்சிக்கு ஏது இலக்ஷியத்தை அடைதற்காகச் செய்யும் முயற்சியே.

(ஓர் அமெரிக்க நாட்டுப் பத்திரிகையினின்றும் பொறுக்கியது)

மதிப்புரை

1. அத்வைத விளக்கம்

ஆசிரியர்: K. கோபாலகிருஷ்ணையர். (1) முதன் மூன்று பாகங்கள்—விலை: ரூ0-2-0, பக்கம் 64 (2) நான்காம் பாகம்—விலை: ரூ0-4-0, பக்கம்—59. கிடைக்குமிடம்: K. கோபால கிருஷ்ணையர், ஓய்வு பெற்ற போஸ்டு மாஸ்டர், 21, ஹனுமந்த ராயன் கோயில் தெரு, மதுரை.

இதிகாசக் கதைகள், புராணக் கதைகள், கட உபநிஷத்கதை, வருணங்கள், யுகங்கள், உலகங்கள்—இவையனைத்திற்கும் உள்ளுறைப் பொருளாகிய ஞானார்த்தங்களை இச் சிறு நூல் புகட்டுகின்றது. இம்மாதிரிக் கதைகட்கும் பெயர்கட்கும் பொருத்தமான அர்த்தங்களை ஞான பரமாகக் கூறக் கூடும் என்பதில் ஐயமில்லை. ஆனல் அவ்வாறு உள்ளுறைப் பொருள் கூறுவதற்கும் எல்லையுண்டு என்பதை ஆசிரியர் மறந்து விடுகிறார். அந்த ஆசை மிதமிஞ்சிச் செல்வதன் பயனாக விளைந்த முடிபுகளாவன: பகவான் அவதாரம் எடுக்கிறார் என்பது 'மயக்கம்'; 'கடவுள்' என்றால், வெளிப் பார்வையைத் தவிர்த்து உள் நோக்கிப் பார் என்பதே பொருள்; கிருஷ்ணவதாரமும் பாரத யுத்தமும் சரித்திர சம்பந்தமான நிகழ்ச்சிகளல்ல; பாரதத்தில் கூறப்படும் 18 நாள் யுத்தமும் கீதை 18 அத்யாயங்களும் 18 யோகங்களாக வருணிக்கப் பட்டிருக்கின்றன; இன்னும் பிறவும். அத்வைதங் கற்போர் மிக எளிதாக ஓர் உண்மையை மறந்து விடுகின்றனர்; அது பின்வருவது. அத்வைத அனுபூதி நிலையிலிருந்து நோக்குங்கால், பகவான் அவதாரம் எடுப்பது மட்டும் மயக்கமல்ல; நாம் இருப்பதும் பேசுவதும் எழுதுவதும் மயக்கந்தான்; (கூறும் ஞானார்த்தங்களும், கண்ணபிரான் கீதையிற் கூறிய அவதார ரஹஸ்யமும் பிறவும்—எல்லாம் மயக்கம் தான்). அதுபோல, அனுபூதியற்ற நமக்கு நாம் இருப்பதும் பேசுவதும் எழுதுவதும் உண்மையாயிருக்கும் வரை, பகவான் அவதாரம் எடுப்பதும் உண்மைதான். 'பகவத் கீதையின் இலக்ஷியம் சகுணோபாசனை தான்' என்கிறார் ஆசிரியர். அவ்வாறாயின் ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் அத்வைத பரமாக பாஷ்யம் எழுதினதும் பொருத்தமில்லாதது போலும்! அத்வைதம் இன்னதென அறியாதார்க்கு இந்நூல் அதனைப் படிப்படியாக முறையாக விளக்கவுமில்லை; ஆயினும் பல ஞானக் கருத்துக்களையும் உள்ளுறைப் பொருள்களையும் கூறுகின்றது.

2. முருகன் தோத்திரப் பாக்கள்

சென்னை தேவராஜ முதலி தெரு 157-நம்பர், பட்டு ஜவுளி வியாபாரம், தி. மு. ஏழுமலை செட்டியாரால் அன்பர்கட்குக் கந்த சஷ்டியன்று வழங்கப்பட்டது. பக்கம்—128.

கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம், கந்தர் கலிவெண்பா, திருமுருகாற்றுப் படை, தெய்வ மணிமாலை, மதுரை மீனாக்ஷியம்மன் கலிவெண்பா முதலிய பல அழகிய இனிய அருட்பாடல்களும் பக்திப்பாடல்களும் அடங்கிய ஒரு சிறு நூல். பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகளின் படம் நூலுக்கு அணியாக முதலில் அமைந்திருக்கின்றது. முருகப் பெருமானுடைய அன்பர்கட்கு இந்நூல் ஞான விருந்தாகும்.

3. ஸ்ரீ பாகவதக் கதைகள்

பிரசுரித்தவர்: தே. ஈ. வேங்கடேச சர்மா. விலை: ரூ3. பக்கம்: 356. கிடைக்கும் விலாசம்: தே. ஈ. துரைசுவாமி ஐயங்கார், தக்ஷிண தேச கிரந்தாலயம், 7, ரங்கராயர் அக்கிரஹாரம், கும்பகோணம்.

பக்திக் கனியை ஞானத் தேனில் ஊறவைத்து அளிப்பது போன்று அமைந்துள்ள பாகவதம் அனைவர்க்கும் ஆன்ம ஞானம் பெற்று முக்தியடைவதற்கு உதவும் ஓர் அரும் பெரும் நூலாகும் என்பதை அறியாதார் எவருமில்லை. அந்நூலை மிக அழகாகச் சுருக்கித் தத்துவபாகங்களையும் ஸ்தோத்திர பாகங்களையும் விடாமல், கதைகள் அனைத்தையும் தொடர்புபட ஆசிரியர் எழுதியுள்ளது போற்றத் தக்கது. பாகவத ஸாரமான இந்நூல் முதல் நூலை வாசிக்க அவகாசமும் திறமையும் அற்றவர்க்கு அதன் பெருமையை உணர்தற்குப் பெரிதும் பயன்படும். ஸ்கந்தவாரி விஷய சூசிகையும், ஒவ்வொரு பக்கத்தின் தலைப்பில் அதிலுள்ள விஷய சாரமும் கொடுக்கப்பட்டுள்ளன. இந்நூலைப் பலரும் படித்துப் பயனடைவாராக!